REGISTERED AT THE G. P. O. AS A NEWSPAPER. T. Phone: 805

# ஈழகேசரி

தேசிய வார வெளியீடு

தாபகர்: நா. பொன்னையா

மலர் 22 | சுன்னாகம், கர மாசி ரு 17-2-52 ஞாயிறு (காந்தி ஆண்டு 83) | இதழ் 31

சாம்பசிவம் அன்ட் கோ.
38 கஸ்தூரியார்வீதி, பெரியகடை, யாழ்ப்பாணம்

திறமான கைக்கடிகாரங்கள், சுவர் மணிக் கூடுகள், மேசை, 'பொக்கெற்' கடிகாரங்கள் விற்பனைக்கிருக்கின்றன
N. SAMBASIVAM & Co.,
38, Kasturiyar Road, Grand Bazaar, JAFFNA

★ அரச குடும்பம் கணப்பொழுதில் அனுபவிக்கும் இன்பத்துக்காக இலங்கை அரசாங்கம் அடிமைபோல் நின்று பல்லிளிப்பதையும் காசைக் கரியாக்குவதையும் சுயமரியாதையுள்ள எவரும் விரும்பமாட்டார்கள்.

# மண்டியிட்டு வணங்கும் கூட்டம்

## கேட்பாரின்றி வரிப்பணங் கரையும் விதம்

**ஈழகேசரி விசேஷ நிருபர்**

கொழும்புத்திட்டப் பொருட்காட்சி திட்டப்படி நடைபெறுவதாயின் இம் மகத்தான காட்சியை இராணி எலிசபெத் அவர்கள் இளவரசிக் கோலத்திற் 16–2–52-ல் சகல ஆடம்பரங்களுடனும் திறந்து வைத்திருந்திருப்பார்கள். ஆனால் ஜோர்ஜ் மன்னர் இறந்த காரணத்தினால் இதனைப் பின்போடவேண்டியதாயிற்று. புதிய மகாராணியின் விருப்பத்தின்படி இக் காட்சியைப் பிரதம தேசாதிபதி சோல்பெரி அவர்கள் 23–2–52 ல் திறந்துவைப்பார்கள்.

### ரூ. 5 இலட்சம்

இளவரசியை வரவேற்பதற்காகச் செய்யப்பெற்ற விசேஷ ஒழுங்குகள் யாவும் இப்போது நிறுத்தப்பட்டுவிட்டன. இதற்காக அரசாங்கம் ஐந்து இலட்சம் ரூபாய் ஒதுக்கிவைத்தது. இதில் மூன்று இலட்சம் இப்போது செலவாகிவிட்டது. இப்படி இலட்சக்கணக்கில் வரிப்பணம் செலவாகிப் போவதையிட்டு அரசாங்கம் கவலையடையவில்லை. இளவரசியின் சப்பாத்தணிந்த பாதங்கள் இரத்தினத்தீவாகிய இலங்கையிற் படியவில்லையே என்பதையறிந்துதான் சேர் ஒலிவர் உட்பட வேறு பல மந்திரிகள் பெருங் கவலையடைகின்றனர்.

இளவரசியும் (இப்போது மகாராணி) எடின்பரோ கோமகனும் ஏனைய பரிவாரங்களும் புகைவண்டிமூலம் மலைநாட்டின் தலைநகரான கண்டிச் சீமைக்குப் போவதற்கான ஏற்பாடுகள் ஏகதடபுடலாக நடைபெற்றன. பாரிய புகைவண்டி யந்திரம் ஒன்று சிவப்புமை பூசப்பெற்றுப் பொன் மூலாம் தீட்டப்பட்டது. இப்போது அதற்கு மீண்டும் கறுப்புமை பூசப்பட்டிருப்பதாக அறியக்கிடக்கின்றது.

### கோட்டை ஏமாற்றம்

இளவரசி கோட்டைப் புகையிரத நிலயத்தைத் தரிசிக்கவிருந்ததால் இப் புகையிரதநிலயத்தின் முகப்பைக் கண்கவர்முறையில் அலங்கரிப்பதற்காக அற்புத வேலைப்பாடுகள் அமைந்தசிகரங்களைத் தயார் செய்யலாயினர். இதற்கான வேலைகள் துரிதமாக நடைபெற்றுவந்ததுமன்றிக் கோட்டைப் புகையிரதநிலயத்திலும் இதற்கான பூர்வாங்க வேலை இரவுபகலாகத் துரிதமாக நடைபெற்று வந்தன. இப்போதுபார்த்தால் அதே புகையிரதநிலயம் பழைய நிலையிற்றான் காணப்படுகின்றது. தலை சாய்க்க இடமில்லாத தொழிலாளர்களும், வீடு வாசல் இல்லாமல் தவிக்கும் ஏழைகளும் கோட்டைப் புகையிரத நிலயத்தின் வெளி விறாந்தைகளிற் படுத்துறங்கி வருவது வழக்கம். இளவரசியின் வருகையை முன்னிட்டு நடைபெற்ற கோலாகலங் காரணமாக வருடக்கணக்காகப் படுத்துறங்கிவரும் இம் மக்களின் நிலைமை திண்டாட்டமாகிவிடும்போல் இருந்தது. கோட்டைப் புகையிரத அலங்காரம் இப்போது தடைப்பட்டுவிட்டமையால் இவர்கள் மீண்டும் மூழத்துண்டை நிலத்தில் விரித்துவிட்டு இந்த உலகத்தையே மறந்து ஆழ்ந்த நித்திரை செய்துவிட்டுப் பல பல என்று விடியுமுன்னர் அந்தப் பக்கமே இல்லாமற் பறந்துவிடுகின்றனர்.

### போலிச் சுதந்திரம்


இளவரசியை வரவேற்று உபசரிப்பதை இலங்கை மக்கள் கண்டிக்கவில்லை. ஆனால் இதற்காக இலட்சக் கணக்கிற் செலவு செய்வதைக் காணத்தான் அவர்களின் வயிறு பற்றியெரிகின்றது. 'இலங்கை சுதந்திரம் அடைந்து விட்டது' எனப் பெருமிதப்பட்டுக்கொண்டு பிரிட்டனையும் அமெரிக்காவையும் இலங்கை மந்திரிமார் மண்டியிட்டு வணங்குவதைக் கண்டுதான் பொதுமக்கள் எள்ளி நகையாடுகின்றனர். ஆகவே பெற்ற சுதந்திரம் வெறும் போலியானதென அவர்கள் சந்தேகமின்றிக் கூறுகின்றனர்.

சிலதினங்களுக்கு முன்னர் கொழும்பிலுள்ள தெமட்டக்கொட வீதியால் ஒரு பெரிய ஊர்வலம் காது வெடிக்கக் கோஷமிட்டுக்கொண்டு விரைந்து சென்றது. இதில் படித்தவர்களும் பாமரர்களும் பாட்டாளி மக்களுங்காணப் பட்டனர். தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் அவர்கள் தங்கள் குறைகளைச் சுலோகங்களாக அமைத்து ஏககாலத்திற் சத்தமிட்டனர். தமக்கு உண்ண உணவில்லை, உடுக்கத் துணியில்லை, உறங்க இடமில்லை என அவர்கள் அலறினர். அதே மூச்சில் இலங்கை அரசாங்கம் இளவரசியின் பாததூளி படுவதற்கு இரத்தினக் கம்பளம் விரிக்கின்றது. அதற்காக வரிப்பணத்தை வாரி இறைக்கிறது என முழக்கித் தள்ளினர். இதனை அவலக் குரலெனச் சொல்லித் தட்டிக் கழித்துவிட முடியாது. இதில் எவ்வளவோ உண்மை பொதிந்துதான் இருக்கின்றது. அரச குடும்பம் கணப்பொழுதில் அனுபவிக்கும் இன்பத்துக்காக இலங்கை அரசாங்கம் அடிமை போல் நின்று பல்லிளிப்பதையுங் காசைக் கரியாக்குவதையும் சுய மரியாதையுள்ள எவரும் விரும்ப மாட்டார்கள்.

### பொருட் காட்சி

இதே கண்கொண்டு கொழும்புத் திட்

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)



பிரதமர் நேரு அலகபாத் தொகுதியில் ஒன்றே முக்கால் இலட்சம் அதிகப்படியான வாக்குகளால் மகத்தான வெற்றிபெற்றார். மக்கள் சபைக்கு மனித குலத்து மாணிக்கமான நேருஜியுடன் நால்வர் போட்டியிட்டுப் படுதோல்வியடைந்தனர்.

# சுயபாஷா ஆசிரியர் தவிப்பு

நாவலப்பிட்டித் தமிழாசிரியர் சங்கச் செயலாளர் திரு. மு. க. சுப்பிரமணியம் எழுதுவதாவது:

ஆசிரிய தராதரப் பத்திர பரீட்சை 1950-ல் நடைபெற்றது. இதற்குப் பின் இப் பரீட்சை நடைபெறவில்லை. ஆகையால் பல ஆசிரியர்கள் தங்கள் தகுதியைக் கூட்டிக்கொள்ள முடியவில்லை. ஆசிரிய சங்கங்களும் மற்றும் ஆசிரியர்களும் பலமுறை கல்விப்பகுதியினருக்கு விண்ணப்பித்துக்கொண்டதற்கிணங்க 1952 வரையில் இப் பரீட்சை நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டது. அறிவித்தலைப் பார்த்ததும் அகம் மகிழ்ந்த ஆசிரியர்கள் பலர். ஆனால், தகுதி என்ற தலைப்பின் கீழ் உள்ள விஷயத்தை வாசித்துத் தலை விறைத்த ஆசிரியர்கள் தொகை அளவிடமுடியாது. உணவு உற்பத்தி ஆசிரியர்களாய் நியமனம் பெற்றிருந்து இப்பொழுது சேவையில் உள்ள ஆசிரியர்களே இப் பரீட்சைக்குத் தோற்றத் தகுதி உடையர் என அறிவிக்கப் பட்டுள்ளது. இது பத்திரிகையில் வெளியான அறிவித்தல். ஆனால் இப் பரீட்சைக்குரிய விதிகள் என வித்தியா பகுதியினரால் 5–1–52-ல் வெளியிடப்பட்ட அண்டுப் பிரசாதத்தில் தகுதி யென்ற தலையங்கத்தில் "உணவு உற்பத்தி ஆசிரியர்களாக நியமனம் பெற்றிருந்தோர் மாத்திரமே இப் பரீட்சைக்குத் தோற்றுதற்குத் தகுதியுடையர்" என இருக்கின்றது.

இதன்படி இப்போது சேவையில் இல்லாது முன்னர் உணவு உற்பத்தி ஆசிரியர்களாக நியமனம் பெற்றிருந்தவர்களும் பரீட்சைக்குத் தோற்றலாம் என்ற பொருளுண்டாகின்றது. எனவே இதில் எது சரியென்பதை ஆசிரியர்கள் எப்படித் தீர்மானிப்பது? எது எப்படி இருப்பினும் பத்திரிகையில்வெளிவந்த அறிவித்தலின்படி பின்வரும் ஆசிரியர்கள் இப் பரீட்சைக்குப் பிரவேசிக்கவியலாதிருக்கின்றனர்:

1. உணவு உற்பத்தி ஆசிரியர்களாக நியமனம் பெற்றிருந்து இப்போது சேவையில் இல்லாத ஆசிரியர்கள்.

2. தமிழ் எஸ். எஸ். ஸி. பரீட்சை சித்தியடைந்து கிரந்தா நியமனம் பெற்றிருக்கும் ஆசிரியர்கள்.

3. ஆசிரிய தராதரப்பத்திர பரீட்சையில் முதலாம் பகுதியோ இரண்டாம் பகுதியோ சித்தியடைந்து சேவையில் இருக்கும் ஆசிரியர்களும் சேவையில் இல்லாத ஆசிரியர்களும்.

4. தோட்டப்பாடசாலைகளில் கற்பிக்கும் எஸ். எஸ். ஸி. சித்தியடைந்த ஆசிரியர்கள்.

5. ஒருவருடத்திற்கு மேலாகப் பதில் ஆசிரியர்களாகக் கடமையாற்றும் தமிழ் எஸ். எஸ். ஸி. சித்தியடைந்த ஆசிரியர்கள்.

மேலே கூறப்பட்ட ஆசிரியர்களின் கதி யென்ன? சில அரசினர் பாடசாலைகளிற் பதில் ஆசிரியர்களாகக் கடமையாற்றுவோர் கிரந்தா நியமனம் பெறுமலிருப்பதற்குக் காரணம் அவர்களுக்குப் போதிய தராதரம் இல்லாமையே என வித்தியா பகுதியினர் கூறும் காரணமாகும். பரீட்சைக்குப் பிரவேசிக்க முடியாது தடை விதிக்கப்பட்டிருக்கும் பொழுது இவர்கள் எப்படித் தராதரத்தைக் கூட்டிக்கொள்ளமுடியும்.

சுதந்திர இலங்கையில் சுயபாஷா ஆசிரியர்களின் நிலை இப்படியிருக்கின்றது. உணவு உற்பத்தியாசிரியர்களாக நியமிக்கப் பட்டோர் தொகை யென்ன? இப்படி நியமனம் பெற்றோரில் இதுவரை ஆசிரியர் பயிற்சிக்குச் சென்றோர் எத்தனைபேர்? நியமனம் பெற்றவர்களில் 1950-ம் ஆண்டும் அதற்குமுன்னும் நடைபெற்ற ஆசிரிய தராதரப் பத்திர பரீட்சையிற் சித்தியடைந்தோர் தொகை யென்ன? இவர்களை நீக்கி இப்போது உணவு உற்பத்தி ஆசிரியர்களாக நியமனம்பெற்றவர்களில் சேவையில் இருப்போர் தொகை யென்ன? மிகச் சிலரே. இந்த ஒரு சிலருக்காக ஐந்து வருடங்களுக்கு இப் பரீட்சையை வருடந்தோறும் ஒன்பது மாகாணங்களில் பல இடங்களிலும் வைக்க வித்தியாபகுதியினர் தீர்மானித்துள்ளனர். இப் பரீட்சையை வைப்பதால் பயன் அடைவோர் எத்தனைபேர்? இவர்களுக்காக வித்தியாபகுதி ஐந்து வருஷத்திற்கும் பரீட்சை நடத்த எவ்வளவு தொகை செலவு செய்யவேண்டிவரும். எனவே ஆசிரியர்களின் நன்மை கருதித் தமிழ் எஸ். எஸ். ஸி. சித்தியடைந்த யாவரும் இப்பரீட்சைக்குப் பிரவேசிக்கக் கூடியதாகவிதியை அமைப்பது அவசியமாகின்றது. எஸ். எஸ். ஸி. சித்தியடைந்த யாவரும் இப் பரீட்சைக்குப் பிரவேசிக்கக்கூடியதாக விதியை அமைக்கவேண்டும் என விரும்புகின்றோம். எஸ். எஸ். ஸி. சித்தியடைந்த யாவரும் பிரவேசிக்க அனுமதி கொடுக்க முடியாவிடில் மேலே சொல்லப்பட்ட ஐந்து பிரிவிலுள்ளவர்களுக்கும் ஒரு முறையாயினும் இப் பரீட்சைக்குத் தோற்ற அனுமதி கொடுக்க வேண்டும். உணவு உற்பத்தி ஆசிரியர்களிலும் பார்க்க கிரந்தா நியமனம் பெற்றுப் படிப்பிப்போர், ஏதாவது ஒரு பகுதி சித்தியடைந்தோர், தோட்டப்பாடசாலைகளில் பல வருடமாகப் படிப்பித்து வருவோர், ஒரு வருடத்திற்கு மேல் பதில் ஆசிரியராகக்கடமையாற்றி வருவோர் இவர்கள் தகுதியிற் குறைந்தவர்களா? பரீட்சைப் பகுதியினர் இவர்களின் பரிதாப நிலையையுணர்ந்து பரீட்சை எடுக்கக்கூடியதாக ஒழுங்கு செய்வார்களாக.

# ஸ்ரீ இலக்குமணன் செட்டியார்

ஸ்ரீ சோம. லெ. இலக்குமணன் செட்டியார் அவர்கள் சென்னையிலிருந்து விமான மார்க்கமாக 18-2-52 திங்கட்கிழமை யாழ்ப்பாணம் வந்தடைகின்றார். அன்று மாலை 4 மணிக்கு வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் ஒரு விரிவுரையாற்றுவார். 4 நாட்கள்வரை இங்கு தங்குவார்.

# மறைவெனும் மரணம்

— சோ. சண்முகபாரதி —

வெய்யிலின் கொடுமை யில்லை
மின்னிவிண் பிளந்து வீசிப்
பெய்திடும் மாரி செய்யும்
பெருந்துயர் தானு மில்லை
வைதிலா வசைகள் சூடும்
வையகப் பிணக்கு மில்லை
பொய்யெலா மில்லை மண்ணின்
பூசலும் புயலு மில்லை.

பசியிலை வறுமை யில்லை
படுந்துயர் தாக மில்லை
வசிவளம் மகிழ்ச்சி யில்லை
வாட்டமோ வளர்ச்சி யில்லை
நிசியிலை ஒளியு மில்லை
நிலைதடு மாற லில்லை
கசிவிலா வஞ்ச மில்லை
காமமோ கரவு மில்லை.

பூதமும் பயமு மில்லை
புல்லியர் செயல்கண் டஞ்சி
நீதியை நாடி நித்தம்
நெடுஞ்சலிப் பெய்த லில்லை
ஆதவன் மதிய மில்லை
ஆறெனும் பருவ மில்லை
பேதமும் பிரிவு மில்லை
பெண்ணிலை யாணு மில்லை.

பொன்முடி சூடி ஞாலம்
புரந்திடும் மன்னன் தானும்
மண்ணினை உழுது கொட்டில்
வாழ்ந்திடும் ஏழை தானும்
வண்ணமும் அழகு மான
வனிதையர் யாவர் தானும்
இன்னிலத் தெழுந்தா ராயின்
இறப்பதே இயல்ப தம்மா.

## வடஇலங்கைச் சங்கீதசபை, யாழ்ப்பாணம்

### 1951-ம் வருடப் பரீட்சையின் பெறுபேறுகள்

(சென்றவாரத் தொடர்ச்சி)

**சாதாரண சித்தி**

O 11. சரோஜினிதேவி வேலுப்பிள்ளை வயலின், 13. சரஸ்வதி நாகலிங்கம் வயலின், 18. பரமேஸ்வரி வைத்திலிங்கம் வாய்ப்பாட்டு, 20. சாந்தநாயகி சுப்பிரமணியம் வாய்ப்பாட்டு & வயலின், 21. குணரத்தினம் சின்னத்துரை வாய்ப்பாட்டு, 23. மகேஸ்வரி செல்லையா வாய்ப்பாட்டு, 24. நீலாம்பிகை செல்லையா வாய்ப்பாட்டு, 25. சிவலோகநாயகி சதாசிவம் வாய்ப்பாட்டு, 26. ஆச்சிப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை வாய்ப்பாட்டு, 27. ஞானேஸ்வரி செல்லையா வயலின், 31. புஷ்பவதி நாகலிங்கம் வயலின், 33. லலிதா நடராஜா வயலின், 38. ஜீவரெத்தினம் சிவக்கொழுந்து வாய்ப்பாட்டு, 39. பரமேஸ்வரி சபாரத்தினம் வாய்ப்பாட்டு. 41. புவனேஸ்வரி சிவக்கொழுந்து வாய்ப்பாட்டு, 45. கமலம் அரியகுட்டி வாய்ப்பாட்டு, 48. நாகரத்தினம் சங்கரப்பிள்ளை வாய்ப்பாட்டு, 59. மனோரஞ்சிதம் சோமசுந்தரம் வாய்ப்பாட்டு, 60. பரமேஸ்வரி பொன்னம்பலம் வாய்ப்பாட்டு. 61. சாரதாதேவி சிவரத்தினம் வாய்ப்பாட்டு, 62. சரஸ்வதிப்பிள்ளை கணபதிப்பிள்ளை வாய்ப்பாட்டு, 66. பத்மாஸனி குமாரசாமி வயலின்.

**2-ம் பகுதி (Grade—2).**

**1-ம் பிரிவு**

C 2. லலிதாதேவி இராமலிங்கம் $* வாய்ப்பாட்டு, 3. புஷ்பவிலோஜினி வேலுப்பிள்ளை $ வீணை, 4. மகேஸ்வரி சரவணமுத்து $* வாய்ப்பாட்டு, 5. கமலாதேவி பொன்னையா $* வாய்ப்பாட்டு, 7. யோகராசி சின்னத்துரை $* வாய்ப்பாட்டு, 8. ஞானம்பிகை சிவசுப்பிரமணியம் $* வாய்ப்பாட்டு & * வயலின், 17. சிவயோகம் செல்வத்துரை வயலின், 18. ஜீவாமுதம் ஆறுமுகம் வாய்ப்பாட்டு, 30. விஜயலட்சுமி பஞ்சாட்சரம் வாய்ப்பாட்டு, 35. கணேஸ்வரி வைத்திலிங்கம் வாய்ப்பாட்டு, 37. மகேஸ்வரி விநாயகமூர்த்தி வாய்ப்பாட்டு, 44. தங்கப்பொன் சபாபதி வாய்ப்பாட்டு, 46. மகேஸ்வரி பொன்னம்பலம் வாய்ப்பாட்டு, 49. சிவகாமிப்பிள்ளை சுவாமிநாதன் வாய்ப்பாட்டு, 60. யோகேஸ்வரி பதஞ்சலிநாதன் $ வயலின் 61. புஷ்பாம்பிகை செல்வத்துரை வயலின், 65. ஜெயமலர் அருமைரத்தினம் $ வாய்ப்பாட்டு & வயலின், 66. சகுந்தலா துரைரத்தினம் $ வாய்ப்பாட்டு & வயலின், 69. லலிதாதேவி நாகலிங்கம் வாய்ப்பாட்டு.

**2-ம் பிரிவு**

C 19. கமலாதேவி தம்பையா வாய்ப்பாட்டு, 20. அன்னலட்சுமி நமசிவாயம் வாய்ப்பாட்டு, 22. மீனாக்ஷி சுந்தர சாஸ்திரி வாய்ப்பாட்டு, 25. திருஞானேஸ்வரி செல்லப்பா வயலின், 27. சந்திரவதி தம்பிஐயா வாய்ப்பாட்டு, 28. புஸ்பகாவதி செல்லப்பா வாய்ப்பாட்டு & (வயலின்—சாதாரணசித்தி) 31. ஜெயசீவி தம்பாபிள்ளை வயலின், 38. ஜெயமணி ஞானரத்தினம் வாய்ப்பாட்டு, 41. தையல்நாயகி இராசரத்தினம் வாய்பாட்டு, 42. சரஸ்வதி முத்தையா வாய்ப்பாட்டு, 45. பராசக்தி சபாபதி வாய்ப்பாட்டு, 47. சற்குணவதி முத்தையா வாய்ப்பாட்டு & வயலின், 48. பொன்னுத்துரை புஷ்பரத்தினம் வாய்ப்பாட்டு, 50. கமலாவதி வைத்திலிங்கம் வாய்ப்பாட்டு, 51. ஞானசௌந்தரி சுவாமிநாதன் வாய்ப்பாட்டு, 55. செல்வரத்தினம் வைத்திலிங்கம் வாய்ப்பாட்டு, 57. சரோஜினியம்மா சபாபதிப்பிள்ளை வாய்ப்பாட்டு, 59. சந்தனவடிவு முருகர்ஐயா வாய்ப்பாட்டு, 71. சத்தியப்பாமா நாகலிங்கம் வயலின், 72. தனவதி கந்தையா வயலின் 74. தங்கமலர் ஆறுமுகம் வாய்ப்பாட்டு.

**சாதாரண சித்தி**

C 1. மங்கையர்க்கரசி நடராஜா வாய்ப்பாட்டு, 9. விமலா ஆறுமுகம் வாய்ப்பாட்டு, 10. சிவேந்திரதேவி சிவராமலிங்கம் வீணை, 14. இராஜமலர் சின்னப்பா வயலின், 15.

(தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க)

சகல பயிர்களுக்கு
C C C பசளைகள்

இலங்கையின் பசளை வியாபாரத்தில்
40 வருடகால அநுபவத்தின் பயனாக

நாங்கள்

C C C
கலவைப் பசளைகளை

தரக்கூடியவர்களாக இருக்கிறோம். இவை இலங்கையில் எல்லாப் பாகங்களிலும் எல்லாப் பயிர்களுக்கும் ஏற்கக்கூடியதாக எமது கமத்தொழில் நிபுணர்களால் விஞ்ஞான முறைப்படி தயாரிக்கப்பட்டவை.

இந்தக் கலவைகள் முழுவதும் மிகவும் உயர்தரமானவை; உத்தரவாதத்துடன் பரிசிலனை செய்யப்பட்டு விற்கப்படுகின்றன. இவைகள் தற்கால யந்திரங்கள் மூலம் கலந்து நெரிக்கப்பட்டிருக்கின்றன. எமது கமத்தொழில் நிபுணர்கள் உங்களுக்கு இலவசமாக ஆலோசனை கூறுவார்கள்.

பசளைக்கு ஒழுங்கு செய்யும்போது கொழும்பு கொமேர்ஷல்கொம்பனியார் விற்கும் C C C கலவைப் பசளையையே பார்த்து வாங்குங்கள்.

கொழும்பு
கொமர்ஷல்
கொம்பனி,
லிமிற்றெட்.

[பெரிய பிரித்தானியாவில் சமுதாயமாக்கப்பட்டு, அங்கத்தவர்களின் உத்தரவாதம் மட்டுப்படுத்தப்பட்டது.]

The
Colombo
Commercial
Company,
LIMITED.

INCORPORATED IN
GREAT BRITAIN
LIABILITY OF MEMBERS Ltd.

தந்தி: COSSACK, தபாற்பெட்டி இல. 33. டெலிபோன் இல. 5351.

[4515]

★ தமிழ் நாட்டிலே இலக்கணப் பயிற்சி குன்றிவிடலாகாது என்று எண்ணி, தொல்காப்பியம், இறையனார் அகப்பொருளுரை, வீரசோழியம், இலக்கண விளக்கம் இவற்றைப் பதிப்பிக்கும் வேலையில் ஈடுபட்டார்.

# தமிழ்க் கலைக் காவலர்

# நூல் பல தொகுத்த தாமோதரனார்



பேராசிரியர் சேதுப்பிள்ளை அவர்கள் சென்னை வானெலியில் 'இலங்கைப் புலவர்கள்' என்ற வரிசையில் தமிழ் வளர்த்த தாமோதரம்பிள்ளை அவர்களைப் பற்றிப் பேசியிருந்தார்கள். அப் பேச்சுப் பிரதியை அனுப்பி வைக்குமாறு இலங்கை அன்பர்கள் பலர் பேராசிரியர் அவர்களை வேண்டினர். அன்பர்களின் ஆவலைப் பூர்த்தி செய்வதற்காகப் பிள்ளை அவர்கள் அதனை ஈழகேசரியிற் பிரசுரிக்குமாறு அனுப்பியுள்ளார்கள்.

—ப-ர்.

கடல் சூழ்ந்த இலங்கையிலே கன்னித்தமிழ் தொன்றுதொட்டு வாழ்ந்து வருகின்றது. அந்த நாட்டிலே செந்தமிழ்ப் புலவர் பலர் தோன்றினர்; தமிழ் மொழிக்குத் தொண்டு செய்தனர். பாவலராய் விளங்கினூர் சிலர்; நாவலராய்த் திகழ்ந்தார் சிலர்; பண்டிதராய்ப் பணிசெய்தார் சிலர்; பழந்தமிழ் நூல்களைப் பரிசோதித்து வெளியிட்டார் சிலர். இத்தகைய பெருமக்களின் உழைப்பினலேயே இன்று நம் தாய்மொழியாகிய தமிழ் புத்துயிரும் புதுவாழ்வும் பெற்று விளங்குகின்றது.

## புலமைத் திறன்

தமிழகத்திலே வாழ்ந்த டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் தமிழின் உயிர்நாடியாகவுள்ள சங்கநூல்களையும் காவியங்களையும் ஆராய்ந்து பதிப்பித்து அழியாப் புகழ் அடைந்தார்கள். ஐயர் அவர்களைப் போலவே அருந் தமிழ் நூலைத் தேடியடைந்து, ஆராய்ந்து அச்சிட்டு வெளிப்படுத்தியவர் இலங்கை அறிஞராகிய தாமோதரம்பிள்ளையவர்கள். அவர் தமிழ்மணங் கமழும் யாழ்ப்பாணத்திலுள்ள சிறுப்பிட்டி என்னும் சிற்றூரிலே சுமார் நூற்றுஇருபது ஆண்டுகளுக்கு முன்னே தோன்றினூர்; ஆங்கிலமும் தமிழும் ஆர்வமுறப் பயின்றூர். இளமையிலேயே தமிழன்பு அவருள்ளத்தில் தழைத்தது அந்நாளில் யாழ்ப்பாணத்திலுள்ள சுன்னுகம் என்ற ஊரிலே சிறந்த தமிழ்ப்புலவராய் விளங்கிய மூத்துக்குமாரக்கவிராயர் அவர்களிடம் அவர் இலக்கியமும் இலக்கணமும் கற்றூர். தமிழ்த் தொண்டு செய்வதற்கு ஏற்ற அறிவும் ஆர்வமும் வாய்ந்த தாமோதரம்பிள்ளைக்குத் தமிழ்நாடு தக்கதொரு வாய்ப்பினைத் தந்தது. சென்னையம்பதியில் நடைபெற்ற தினவர்த்தமானி என்னும் தினசரிப் பத்திரிகையின் ஆசிரியராகப் பிள்ளையவர்கள் அமர்ந்தார் அப்பத்திரிகையின் வாயிலாக அவர் புலமைத் திறம் நன்கு புலனுயிற்று. சென்னை அரசாங்கத்தார் அவரை இராஜதானிக் கல்லூரியில் (Presidency College) தமிழாசிரியராக நியமித்தார்கள் அந்த வேலையில் இருந்துகொண்டே அவர் சென்னைப் பல்கலைக்கழகத்தில் பீ ஏ. பட்டம் பெற்றூர். அவருடைய நிர்வாகத்திறமையையும்நெறிமுறையையும் கண்ட அரசாங்கத்தார் அவரைத் துரைத்தன வேலையில் அமர்த்தினர். இருபது ஆண்டுகள் அரசாங்க வேலை பார்த்து அவர் ஓய்வு பெற்றூர். அவருடைய நேர்மையையும் திறமையையும் பாராட்டிச் சென்னை அரசாங்கம் 'ராவ் பகதூர்' என்ற பட்டமளித்தது. துரைத்தன வேலையிலிருந்து ஓய்வுபெற்றபின்னர் பிள்ளையவர்கள் கும்பகோணத்தில் வக்கீல் தொழில் நடத்தினூர்; சிலகாலம் புதுக்கோட்டை அரசாங்கத்தில் நீதிபதியாகவும் சேவை செய்தார்.

## தமிழைப் பாதுகாத்தல்

இவ்வாறு பத்திரிகை ஆசிரியராகவும், போதகாசிரியராகவும், உத்தியோகஸ்தராகவும், வக்கீலாகவும், நீதிபதியாகவும் பிள்ளையவர்கள் பணிசெய்தாரேனும் நிலைத்த புகழ் அவருக்குத் தமிழ்ப் புலமையின் வாயிலாகவே கிடைத்தது. கும்பகோணத்தில் வக்கீலாயிருந்தபோது அங்கு அரசாங்கக் கல்லூரியில் தமிழாசிரியராயிருந்த சாமிநாதையரவர்களின் பழக்கம் பிள்ளையவர்களுக்கு ஏற்பட்டது. பழைய தமிழ் நூல்களின் ஏட்டுச் சுவடிகளைத் தேடுவதிலும் அவற்றைப் பழுது பார்த்துப் பரிசோதிப்பதிலும் மெய் வருத்தம் பாராது மனம் சலியாது ஈடுபட்டிருந்த ஐயரவர்களும் பிள்ளையவர்களும் ஒத்த உணர்ச்சியால் உயரிய நண்பர் ஆயினர். அப்போது சிந்தாமணி என்னும் சிறந்த பெருங் காவியத்தைப் பதிப்பித்தற்காக ஐயரவர்கள் ஆராய்ந்து கொண்டிருந்தார்கள் நற்றாமரைக் குளத்தில் நல்லன்னம் சேர்ந்தாற்போல் அவர்களோடு பிள்ளையவர்கள் நாள்தோறும் பழகி அளவளாவினூர்கள். சிந்தாமணியின் நயங்களையும், கம்பர் கவித்திறனையும் இருவரும் மனமாரப் போற்றி வாயரப் பேசி மகிழ்ந்த செய்தியை என் சரித்திரம் என்ற நூலிலே ஐயரவர்கள் எழுதியுள்ளார்கள்.

கும்பகோணத்தில் இருந்தபொழுது தாமோதரம்பிள்ளையவர்கள் அச்சிடப்படாத பல அருமையான தமிழ்நூல்களைப் பனையோலைச் சுவடிகளைக்கொண்டு பரிசோதித்துப் பதிப்பிக்கத் தொடங்கினூர். தமிழ்நாட்டிலே இலக்கணப் பயிற்சி குன்றிவிடலாகாது என்று எண்ணி, தொல்காப்பியம், இறையனூர் அகப்பொருளுரை, வீரசோழியம், இலக்கணவிளக்கம் இவற்றைப் பதிப்பிக்கும் வேலையில் ஈடுபட்டார். இந்நூல்களை விலை கொடுத்து வாங்கிப் படிப்பவர் மிகச் சிலரே என்பதைப் பிள்ளையவர்கள் அறியாதவரல்லர், ஆயினும் கைப்பொருளைச் செலவழித்தாகிலும் பழந்தமிழைப் பாதுகாத்தல் வேண்டும் என்னும் ஆசையே அவரை உந்துவதாயிற்று. இந்த நோக்கத்தை அவர் தாமே ஒரு பதிப்புரையில் வெளியிட்டுள்ளார். அவர் கூறுகின்றூர்:- "பழைய சுவடிகள் யாவும் இலமாய் ஒவ்வொன்றுய் அழிந்து போகின்றன. துரைத்தனத்தார்க்கு அதின்மேல் இலட்சியமில்லை. சரஸ்வதியைத் தம்பால் வகிக்கப்பெற்ற வித்வான்களை அவள் மாமி (இலட்சுமி) எட்டியும் பார்க்கின்றுளில்லை. இந்த நிலையில் பழைய தமிழ் நூல்களைப் பாதுகாத்தற்பொருட்டு அடியேன் ஏட்டுப் பிரதிகள் தேடிப் பரிசோதித்து அச்சிடுவதில் புத்தகங்கள் விலை போகாமல் நஷ்டம் நேரிடுகின்றது" என்று முறையிடுகின்றூர்.

ரா. பி. சேதுப்பிள்ளை
தமிழ்ப் பேராசிரியர்
சென்னை, பல்கலைக் கழகம்

## பதிப்பாசிரியர்

அவர் பதிப்பித்த காலத்தில் ஏட்டுச் சுவடிகள் பெரும்பாலும் எடுப்பாரும் அடுப்பாருமின்றி அவலமாய்க் கிடந்தன. அவற்றைப் பாடுபட்டுத் தேடிப் பரிசோதித்த பிள்ளையவர்கள் கூறுகின்றூர்:- "ஏட்டுச் சுவடிகள் கெட்டுச் சிதைந்து கிடக்கும் நிலைமையைத் தொட்டுப் பார்த்தால் அன்றே தெரிய வரும்? ஏட்டை எடுக்கும் போது ஓரம் சொரிகிறது; கட்டை அவிழ்க்கும்போது இதழ் முறிகிறது; ஏட்டைப் புரட்டும்போது துண்டுதுண்டாய்ப் பறக்கிறது" என்று அவர் கண்ட காட்சியை வருத்தத்துடன் தெரிவிக்கின்றூர்.

இப்படிப்பட்ட ஏடுகளை வைத்துக்கொண்டு எழுத்தெழுத்தாகக் கூட்டிப் படித்து, பதம் பதமாகப் பழுது பார்த்து பரிசோதனை செய்வதற்கு எவ்வளவு பொறுமை வேண்டும்? எத்துணைப் புலமை வேண்டும்! அளவிறந்த பொறுமையோடும் அருமையான புலமையோடும் சிந்தாமணி முதலிய பெரிய நூல்களை அச்சிட்டு வெளிப்படுத்திய ஐயரவர்களைத் தாமோதரம்பிள்ளையவர்கள் மனமாரப்பாராட்டுகின்றூர். பெற்றவளுக்கன்றே தெரியும் பிள்ளைப்பேற்றின் அருமை! பதிப்பாசிரியரைக் குறித்துப் பிள்ளையவர்கள் கூறுவதைக் கேளுங்கள்:- "பரிசோதனாசிரியர் படும் கஷ்டம் ஓர் அரிய பழைய நூலைச் சுத்த மனச் சாட்சியோடு பரிசோதித்து அச்சிட்டார்க்கன்றி விளங்காது. தூக்கினூல் அன்றே தெரியும் தலைச் சுமை? ஒன்றற்கொன்று ஒவ்வாத இருபது, இருபத்தைந்து பிரதிகளையும் அடுக்கி வைத்துக்கொண்டு, என் கண் காணச் சிந்தாமணிக் காவியத்தைப் பரிசோதனை செய்து, பதிப்பித்த கும்பகோணம் வித்யாசாலைத் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீமத் உ. வே. சாமிநாதையரைக் கேட்டால் சற்றே தெரியலாம். எனக்கு அவரும் அவருக்கு நானுமே சாட்சி" என்று பிள்ளையவர்கள் கூறுகின்றூர், இவ்வாறு கால்வருந்த ஏடு தேடி, கண் வருந்த ஆராய்ந்து தமிழ்க் கலைகளைப் பாதுகாத்த அறிஞர்களின் அருஞ் சேவையை இப்போதுள்ள இலங்கைக் கவிஞர் ஒருவர் 'தமிழ்த் தாலாட்டு' என்ற பாட்டிலே நன்றாக எடுத்துக் கூறியுள்ளார்:

"மூச்சங்க வாழ்வும்
முடிமன்னர் காவலும்போய்
அச்சத்தின் மேலும்
அயற்பழியும் ஆயினவோ
ஆதரிப்பார் போனூர்கள்
ஆடையணி இல்லையென்று
மாதரசி! கொந்த
மனக்கவலை கொள்ளுதியோ
சீரழிந்து கெட்டுச்
சிதைந்து நிரைமாறிப்
பேரழிந்து பூஞ்சு
பிடித்துப் பிடியாகி
முன்பின் மூாணி
முழுதும் புழுஉழுது
கம்பை நமுரிந்து
கட்டுவிட் டுச்சிதறி
மூலைக்கு மூலை
மடங்கி முடங்கிக்கிடந்த
கோலத் திருவா
பரணக் குவைவெல்லாம்
வாலறிவின் மேலோர்
வருந்தி எடுத்தார்கள்
ஊணும் துகிலும்
உடற்சுகமும் கைப்பொருளும்
நாணும் கைவிட்டவர்கள்
காடி எடுத்தார்கள்
நாடி எடுத்து
நலனழியா மல்திருத்தி
நீடுலகில் எங்கும்
நிறைய அளித்தார்கள்"

என்ற தாலாட்டுப் பாட்டு, ஏடு காத்த பீடுடையாரைப் பாராட்டுகின்றது.

## தொல்காப்பியம்

இத்தகைய தீராத தொல்லைகளின் இடையே பிள்ளையவர்கள் பதிப்பித்த நூல்கள் புலவர் உலகத்தில் தலைசிறந்து விளங்குவன என்று சொல்லவும் வேண்டுமோ? அவர்கள் அச்சிட்ட தொல்காப்பியம் செந்தமிழ் மொழியின் பழமையான இலக்கணம். தமிழின் தொன்மைக்கும் செம்மைக்கும் ஒரு தனிச் சான்றுக நிற்பது அவ்விலக்கணமே. இனி நற்றமிழ்ப் புலவராகிய நக்கீரர் இயற்றியதாகக் கொள்ளப்படும் இறையனூர் அகப்பொருளுரை பழங்காலத் தமிழின் உரைநடைக்கு ஓர் எடுத்துக்காட்டாக இலங்குவது. இன்னும் பிள்ளையவர்கள் வெளியிட்ட வீரசோழியம் என்னும் இலக்கண நூல் தமிழ் மொழியின் வரலாற்றில் ஒரு தனியிடம் பெற்றுள்ளது. ஏறத்தாழ எண்ணூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னே எழுதப்பட்ட இவ்விலக்கணம், தமிழ்மொழியின் இடைக்கால இலக்கியத்திற்கு இலக்கணம் என்று கருதப்படுகின்றது. தமிழ்நாட்டிலே வீரசோழன் என்னும்பெயருடைய வீரராஜேந்திரன் பெருமன்னனுக அரசு வீற்றிருந்தபோது இயற்றப்பட்ட இவ்விலக்கணம் அவன்பெயா தாங்கி நிலவுகின்றது. பிள்ளையவர்கள் தொண்டைமான் புதுக்கோட்டையில் நீதிபதியாக இருந்தபோது அச்சிட்டு வெளிப்படுத்திய இலக்கணவிளக்கம் என்ற நூல் தமிழ்நாட்டிலே 'குட்டித் தொல்காப்பியம்' என்று கலையறிந்தோர் போற்றுதற்குரிய ஏற்றம் வாய்ந்தது. திருவாரூரில் சுமார் முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னே சிறந்த தமிழப் புலவராய்த் திகழ்ந்த வைத்தியநாத தேசிகரால்

(தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க)




வுட்வர்ட்ஸ் கிரைப் வாடர்
குழந்தைக்கு கோடை இரவுகளில் நல்ல தூக்கத்தைக் கொடுக்கும்

WOODWARD'S
GRIPE WATER
keeps baby well

I-WW107-111 TAM W. WOODWARD LTD. LONDON. ENGLAND




# ஈழகேசரி

சுன்னுகம், கரஹு மாசி ௫
— காந்தி ஆண்டு 83 —
பேசுந் தந்தி இல. 805


## நாடு சிறக்க வழி

நமது நாட்டின் அரசியல் நிலைமையை ஆராய்ந்து நோக்கின் அதன் பண்பாடு வரவரக் குன்றி வருவது வெளிப்படை. கூட்டுமுறையிற் கையாளப்படும் பொது விஷயங்களில் நாம் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்பது இன்னும் முற்றுக அறியாதிருப்பது தான் எல்லாத் தீமைகட்கும் காரணமாகும். தனித்த ஒருவரது வாழ்க்கை உயர்நிலை அடைவதற்குச் சன்மார்க்கமும், நடுநிலைமையும், தர்மசிந்தையும், நிதானமும் எவ்வளவு அவசியமோ, அதுபோலவே பொது ஸ்தாபனங்களாகும் அரசியற் றுறைகளிலும் இப்பண்பாடு மிக அவசியமாகும். இதனை அக்கறையுடன் கையாண்டு வந்தாற்றான் அரசாங்கம் உயர்நிலை அடைந்து நாடும் நன்மையுறும்.

அரசாங்கத்திற் கடமையாற்றும் மிகச் சிறிய உத்தியோகத்தர் முதற்கொண்டு மிக உயர்ந்த உத்தியோகத்தர் ஈருக எல்லோரும் மேற்காட்டிய உயரிய இலக்கணங்களைச் சிறிதும் பொருட்படுத்துவதாகக் காணேம். எவ்வழியிலும் பொருளை ஈட்டியே தீரவேண்டும் என்கின்ற ஒரேயொரு நோக்கினை அடிப்படையாகக் கொண்டு சில பகிரங்க உத்தியோகத்தர்கள், அரசாங்கப் பண்பாடுகளைப் புறத்தேவிட்டு, பழிப்புக்கிடமான இழிந்த செயல்களில் அச்சமும் நாணமுமின்றி ஈடுபட்டு வருகின்றனர். அரசாங்கத்தில் இவ்வித குறைகள் முன்னர் ஒருபோதும் இருக்கவில்லை என்று நாம் கூறவில்லை. ஆனல், சென்ற சில வாண்டுகளாக, அதாவது சமீபத்தில் நடந்த யுத்த காலந் தொடக்கம், பகிரங்க சன்மார்க்கம் குன்றிவிட்டதென்றே கூறவேண்டும். பெருந்தொகையான உத்தியோகத்தரையாவது நாம் சிறிது ஊன்றி ஆராய்ந்து நோக்கின், அவர் தமக்குக் கிடைக்கும் சம்பளத்தோடுதிருப்தியடையாதுகளவு வழியில் பொருளை ஈட்டமுயல்வதைக் கவனிக்கலாம். இந்தக் கொடுந்தீமை வரவரக் கூடிக்கொண்டு வருவதுயாவருமஅறிந்தவிஷயம்.

உயர்ந்த உத்தியோகம், பதவிகள் என்பன வகிப்போரின் சன்மார்க்கநிலை குன்றத்தொடங்கிய பின்னர்தான் அரசாங்கப் பண்பாடும் பெரும்பான்மையும்குன்றியது. இற்றைக்கு முப்பது நாற்பது ஆண்டுகட்கு முன்னர் அரசாங்கப் பகுதிகளில் தலைமை வகித்தோர்நேர்மையாகநடந்துவந்தனர். கீழ் உத்தியோகத்தர் நிதானந்தவறின் தப்பினபாடில்லை. இன்றேவெனின், எவன் பணம் செலவழிக்க வல்லானே, அவன் எப்படியும் முறைதவறி நடக்கலாம் எந்த அரசாங்கப் பகுதியிலும் இக்குறைகள் தாராளமாக நடந்துவருவதால், இவைகள் குற்றங்கள் என்றும் இவைகளைச் செய்வோர் பழிக்கப்படுவரென்றும் எண்ணுவதே கிடையாது. இவ்விதமான பண்பாடு குறைந்த அரசாங்கம் எவ்வளவு காலத்துக்கு நிலைபெறும்? இதனுல் பெருந்தீமை நாட்டிற்கு வந்துசேராதா? இவற்றைப் பொதுமக்களாயுள்ளோர் சிந்திக்க வேண்டும். வாழ்க்கைத் தரத்தை ஏற்ற முறையில் உயர்த்துவதற்கு இவ்வித பிழையானமுறைகள் உதவியாகுமா, அல்லது நிலையான பயனைக் கொடுக்குமா என்பதுதான் கேள்வி.

ஆகவே, பொதுமக்களாயுள்ளோர் விழித்தெழுந்து தமது பாழான நிலையை உணர்ந்து நாட்டின் நன்மையை நாடி அக்கறை காட்டுவது அவசியம். பொதுமக்கள் இவ்விஷயத்தில் உறுதியாகநின்று நிதானந்தவருது ஒழுகுவாராயின் உத்தியோகத்தர் முறைதவறிநடப்பது இயலாதகாரியம். உயர்ந்த உத்தியோகத்தரைத் தெரியும்போது அவர்களின் இலக்கணங்கள் இழுக்கற்றனவாவென்பதை அரசினர் நன்கு சீர்தூக்கி ஆராய்ந்து பார்ப்பது அவசியமாகும். நாடு இவ்விஷயமாக அடைந்துள்ள பரிதாப கதியைச் சடுதியாக நீக்கிவிட வியலாது. ஆனல், அரசினர், பொதுமக்கள், வித்தியாசாலைகள், சனசமூக சங்கங்கள் ஊக்கத்துடன் முயற்சியைக் கையாண்டு பணியாற்றின் இப்பெரிய தீமையைச் சிறிது சிறிதாகத் தடுக்கவியலும். கிராமசங்கம், நகரசங்கம், பட்டினசங்கம், பிரதிநிதிகள் சபை என்னும் சுயாட்சிஸ்தாபனங்கட்கு அங்கத்தவரைத் தெரியுங் கடமையில் பண்பாடும் நிதானமுந் தவருது உயரிய முறையில் நடந்துகொண்டால் அரசாங்கத்தை ஊழல்களினின்றுங் கைதூக்கித் தூய்மையில் வைத்தல் கஷ்டமன்று.

---

### என்ன காரணமோ?

காங்கேசன்துறைச் சீமேந்துத் தொழிற்சாலையிற் கடமையாற்றும் நிபுணர்களாயுள்ள உத்தியோகத்தர்கள் பொதுவாக மேலைத்தேசத்தினராவர். தொழில்முறையிற் போதிய முன்னேற்றமடையாத நமது நாட்டில், இவர்கள்உதவி இன்னும் பல்லாண்டுகட்கு வேண்டப்படுவது தவறன்று. இவ் வெள்ளையர்கள் சென்ற சில மாதங்களாக ஒருவர்பின் ஒருவராக இச்சீமேந்துத் தொழிற்சாலையைவிட்டு ஓடிச்செல்கின்றனர். முன்னர் இருபெரிய உத்தியோகத்தர் விட்டுச்சென்றதாக அறிந்தோம். அவருள் ஒருவர் அத்தொழிற்சாலையை நடத்தும் பரிபாலகர். இப்பொழுது மூன்று பெரிய உத்தியோகத்தர்கள் ஏதோ காரணத்தால் இவ்விடம்விட்டுக் கல்கத்தா செல்கின்றனராம். போதிய சம்பளங் கிடையாமையே முக்கிய காரணமென்பதைநாம்நம்பவில்லை. தொழில் விருத்தியைநாடி நிபுணர்களின் சகாயத்தைப்பெற எவ்வளவு பணமுஞ் செலவுசெய்ய இலங்கையரசினர் தயாராகவிருக்கின்றனர். எனவே ஏதோ அபிப்பிராயபேதம் அல்லது திருப்திக்குறைவு காரணமாகத்தான் செல்கின்ருரோவென்று சந்தேகப்படவேண்டியிருக்கின்றது. சீமேந்துத்தொழிற்சாலை உறுதியான நிலையை அடைந்து பெரும்பயனை அளிக்கும்வரை ஐரோப்பிய தொழில் நிபுணர்களது நெருங்கிய உதவி எமக்கு வேண்டுமென்பது மறுக்கவியலாத உண்மை. எனவே இத்தொழிற்சாலை விஷயமாக இவ்வித ஊழல்கள் ஏற்படுவதை எவரும் விரும்பார். கைத்தொழில் ஆராய்ச்சிப் பகுதி மந்திரியார் இவ்விஷயமாக ஓர் அறிக்கை வெளியிடின் உண்மையை யாவரும் அறியலாகும்.

## பாதை ஓரத்தில்




இலங்கையில்எடுத்ததற்கெல்லாம் நிபுணர்கள் பறந்துவந்து குதிக்கின்ற வேகத்தைக் கண்டு ஈழகேசரி கொழும்பு நிருபர் ஒரு சமயம் பின்வருமாறு எழுதியிருந்தார்: "இனி, கத்தரிக்காய் நிருபருங் கருவாட்டு நிருபரும் இங்கு வந்திறங்குவார்களானல் அது நூதனமாகாது.' இப்படியவர் எழுதிய பின்னர் கருவாட்டு நிபுணர்கள் வராதுவிட்டாலும் எருமை நிபுணர் ஒருவர் வந்து இந்த மிருகத்தின் அருமை பெருமைகளை யெல்லாம் ஆங்கிலத்தில் உருட்டித் தள்ளி விட்டுப் போயிருக்கின்ருர். எருமைகள் நாட்டின் தேசியச் செல்வம் என்பதை அவர் ஞாபகமூட்டியிருப்பதுடன் எருமைப் பாலின் குண விசேடத்தைப் பற்றியுங் குறிப்பிட்டிருக்கின்ருர். மீன்பாடும் தேன்நாடு எனப் புகழப்படும் மட்டக்களப்பிலே எருமைகள் அதிகமிருப்பதால் அங்கு பாலுக்குந் தயிருக்கும் ஒருபோதுங் குறைவேயிருப்பதில்லை சென்ற ஏப்பிரல் மாதத்தில் யாழ்ப்பாணத்திலே தேனினுமினிய தமிழ் விழா நடைபெற்றபோது மட்டக்களப்பிலிருந்தே முட்டி முட்டியாகத் தயிர் வந்து குவிந்தது. அதனைச் சோற்றுடன் பிசைந்து தின்ற அத்தனை ஆயிரம் பேரும் சாகும் வரையும் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழ்விழாவை மறக்கவேமாட்டார்கள். மட்டக்களப்பிலே எருமைத் தயிருடன் பொன்போன்ற தேனையுஞ் சேர்த்து உண்பார்கள். அங்குள்ள அருமையான அரிசிச் சோற்றுடன் தயிரும் தேனும் சேரும்போது தேவாமிர்தமாயிருக்கும். வெளிநாட்டு நிபுணர்கள் வந்து புத்திமதி கூறும் வரை அங்குள்ள மக்கள் பார்த்துக்கொண்டிருக்கவில்லை. அவர்கள் பிறந்தநாட் தொடக்கம் எருமைகளைப் பாதுகாத்து வருகின்ருர்கள். அதன் பயனையும் நன்கு அனுபவித்துவருகின்ருர்கள். இலங்கையில் உள்ளவர்கள் சொந்த நாட்டுச் சுவாத்தியத்துக்குக் கேற்ப ஒழுகாது மிருகங்களை வளர்க்கும் விஷயத்திலும் ஐரோப்பியமுறைகளையே அனுட்டித்துக் குடிக்கத்தானும் பாலின்றிக் குட்டிச்சுவராகி வருகின்றனர் மேனுட்டுப் பசுக்களை வளர்ப்பதற்காகக் கட்டடங்கள் அமைத்துக் காசைச் செலவு செய்பவர்கள் கவனிப்போர் அற்றுச் சுரியிற் கிடக்கும் சுணைமணையற்ற எருமைகளை இனி வீட்டிற் கட்டி வளர்க்க முன்வர வேண்டும். எருமைப் பால் கிரந்தி, சூடு என்று விஷயம் அறியாமற் பேசித் திரியாது அதன் பாலைப் பொன்னெனப்போற்றி உண்டு களித்து உடம்பை வலுப்பெறச் செய்யவேண்டும். எருமை நிபுணரின் அறிக்கை வெளிவர முன்னரே சினிமாப் படம் ஒன்றில், 'என் எருமைக் கன்னுக்குட்டி' என்று சிறுவன் ஒருவன் பாடிப்பட உலகிற் பெயர் வாங்கிவிட்டான்! ஆகவே எருமையைப் பற்றி இனி ஒருவரும் பொல்லாப்புச் சொல்லக்கூடாது

### அருள் இல்லை

இளவரசியின் வருகையை எதிர்பார்த்து எத்தனையோ பேர் எத்தனையோ காரியங்களைச் செய்தனர். ஒரு சில பெரிய புள்ளிகளின் பெண்மணிகள் நேரத்துக்கொரு சேலைகட்டிச் சிங்காரிகளைப் போல்விளங்குவதற்காகவிலை உயர்ந்தபுடைவைகளைவாங்கி அடுக்கி வைத்தனர். வேறு சிலர் வரவேற்றுக் கைகுலுக்குங் கலையிற் பயிற்சி பெற்றுச் சறுக்கி வீழ்ந்தனர். கரண்டி, முள் பிடித்து விருந்து வைபவங்களிற் கலந்துகொள்வதற்குத் தயார்செய்தனர் பலர். இவர்கள் எல்லாரையும் ஒதுக்கிவிட்டுக் கொள்ளை இலாபம் அடிப்பதற்குப் பென்னம் பெரிய வர்த்தகர்கள் தொடக்கம் சின்னஞ் சிறு வியாபாரிமார் ஈருகத் திட்டங்கள் போட்டனர். இப்போது எல்லாரும் தலையிலே கை வைத்துக்கொண்டிருக்கின்றனர். இவர்களுக்கு அருள் இல்லை. இது யார் செய்த பாவம்!

---

### கள்வர் அகப்பட்டனர்

#### தொண்டர்படையின் சேவை

கடந்த பன்னிரண்டு வருடங்களாக ஒரு கூட்டங் கள்வர் நவாலியிலுள்ள வயல்களில் இராக்காலங்களில்புகுந்து நெற்கதிர்களை வெட்டியும் சூடுகளை அள்ளியும் கமக்காரருக்குக் கெடுதி செய்துவந்தனர்.

இம்முறை நவாலியிலுள்ள கிராமவிருத்திச் சங்கத்தார் ஒருதொண்டர்படையை ஏற்படுத்திக் காவல்புரிந்துவந்தனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை (10-2-52) இரவு 2 மணி வரையில் இத் தொண்டர் படை, பொலிசார் உதவியோடு கள்வரை அகப்படுத்திக்கொண்டது.

### மறவன்புலோவில் சுதந்திரதினம்

கி. மு. சங்கம், ச. சே. சங்கம், பெ. ஆ. சங்கம் என்பவற்றின் ஆதரவில் இம்மாதம் 4-ந் திகதி மறவன்புலோ சகல கலாவல்லி வித்தியாசாலையிற் சுதந்திர தினக்கொண்டாட்டம் ஆரம்பமானது. சுதந்திர ஞாபகார்த்தமாக திரு. வே. சபாரத்தினம் அவர்களால் பாடசாலை முன்றிலில் மாங்கன்று நாட்டப்பட்டது. பகிரங்கக் கூட்டத்துக்கு திரு. ச. கந்தையா அவர்கள் தலைமைவகித்தார்.

### திருமணம்

பெரியசுவாமி —
பாப்பாத்தி அம்மாள்

திரு. மு. சடையன் கங்காணி அவர்களின் புத்திரன் செல்வன் பெரியசுவாமிக்கும், திரு. ஐயம்பெருமாள் அவர்களின் புத்திரி செல்வி பாப்பாத்தி அம்மாளுக்கும் சென்ற 4-2-52-ல் தலவாக்கொல்லையிலே திருமணம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. தம்பதிகள் சகலசம்பத்துக்களையும்பெற்று நீடூழி வாழ்வார்களாக!

### இசைத் தமிழ் நிலையம்

மருதனர்மடத்தில் அமைந்திருக்கும் உடுவில் சனசமூக நிலைய மண்டபத்தில், இசைத் தமிழ் நிலையத்தாரின் இசை அரங்கு வழக்கம்போல் 10-2-52 மாலை சிறப்பாக நடைபெற்றது. பல பிரமுகர்களும் பெண்மணிகளும் இரசிகர்களும் சிறுவர்களும் குழுமியிருந்து நிகழ்ச்சிகளை அனுபவித்தனர்.

முதலாவதாக நடைபெற்ற நாதஸ்வர இசை மிகவும் நன்றாயிருந்தது. இதற்குப் பக்கவாத்தியமாகப் பிடிலும், மிருதங்கமும், கடமும் வாசித்தது மிகவும் பொருத்தமாயிருந்தது. பிடில் வாசித்தவர் கூடியவரையில் சுத்தமாகவும் அனுசரணையாகவும் வாசித்தார்.

இரண்டாவதாக, நிலையத்திற் பயிற்சிபெறும் மாணவிகளுடைய பாட்டு நடைபெற்றது: வயதில் மிகவும் குறைந்த, மழலைச் சொல் பேசும் பிராயத்தையுடைய பாலகிகளின் இசையைக் கேட்டு எல்லோரும்உளம்பூரித்து மெச்சினர். பின்னர் வி. எஸ். எஸ். மணிஐயர் அவர்களின் சங்கீதகதாப்பிரசங்கம்நடைபெற்றது

### பலாலி ஆசிரிய மாணவர் சுற்றுப்பிரயாணம்

இலங்கையின் சரித்திர பூமிசாஸ்திர சம்பந்தமான இடங்களைப் பார்வையிடுவதற்காகப் பலாலி அரசினர் ஆசிரிய கலாசாலை 2-ம் வருட மாணவர்கள் இருபத்தைந்து பேர், சரித்திர பூமிசாஸ்திரப் பேராசிரியர் திரு. பி. எம். வேதநாயகம் பி. ஏ. அவர்களின் தலைமையில் 16-2-52 சனிக்கிழமை புறப்படுவார்கள். அவர்கள் பத்துநாள் வரை சுமார் 1000 மைல் தூரத்துக்குச் சுற்றுப்பிரயாணம் செய்வர். அநுராதபுரம், பொலநறுவா, சிகிரியா, தம்பளை மாத்தளை முதலிய இடங்களைத் தரிசிப்பர். கொழும்பில் 3 நாட்கள் தங்கிக் கொழும்புப் பொருட்காட்சியையும் பார்வையிடுவர்.

### மண்டியிட்டு வணங்கும் கூட்டம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டப்பொருட்காட்சியைப் பார்த்துக் குறைகூறுவது பொருந்தாது. தென்கிழக்கு ஆசிய நாடுகளின் பொருளாதாரநிலை செம்மையுறுவதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுவரும் இந்நாட்களில் இப்பொருட்காட்சியும் இதில் ஓர் அம்சமாகவே அமைகின்றது. தொழில் நுட்பங்களைப் பற்றிய அறிவும், யந்திர சாதனங்களின் உதவியும் நாட்டின் அபிவிருத்திக்கு உதவி வருகின்றனவென்பதை இப் பொருட்காட்சி உணர்த்தி வைக்கும்.

#### அற்புத உலகம்

கல்வி, கலை, சித்திரம், கைத்தொழில் சம்பந்தமான பகுதிகளும் இப்பொருட்காட்சியில் இடம்பெற்றுள்ளன. பல்வேறு நாடுகளிலிருந்தும் நுட்பமான சித்திரங்களும், அற்புதமான யந்திரங்களும் வந்துள்ளன. இந்திய நிலையம் இரண்டரை இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ளது. இலங்கை நிலையம் கண்டியிலுள்ள தலதமாளிகையைப் போன்று உருவிற் காட்சியளிக்கின்றது. இவ்வாறே அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளெல்லாம் தத்தம்பண்பாட்டைவிளக்கும் முறையில் அழகான நிலையங்களை நாட்டியுள்ளனர். சுருங்கக் கூறின் இப் பொருட்காட்சியும் அதனைச் சுற்றியுள்ள இடமும் இராக்காலத்தில் இந்திர லோகத்திலுள்ளவர்களையும் பிரமிக்கச் செய்யும் என்பதிற் சந்தேகமேயில்லை.


புத்தகங்கள், பத்திரிகைகள், விற்பனையாளர்கள்.



தமிழ்ப்பண்ணை
யாழ்ப்பாணம். இலங்கை.

# குளத்தைக் கலக்கிய வேலை

## கொம்யூனிஸ்ட் பருந்துக்கு இரை

### இந்தியா

உத்தரப் பிரதேசத்தில் நடக்கும் தேர்தல் மிக்க குதூகலத்தை யுண்டாக்குவதாகும். தென்னிந்தியாவிற் போலன்றி அங்கு மக்களின் தலைவர்கள் எவ்வளவு நம்பிக்கையுடையர். கட்சிக் கிரமங்கள் ஒழுக்கங்கள் அங்கு எவ்வளவு நிதானமாகவுளவென்பது நன்கு தெரிகின்றது. இம் மாகாண அரசாங்கசபையின் அங்கத்தவர் தொகை 430. இதுவரையிற் தெரியப்பெற்றோர் 256. இவர்களில் காங்கிரஸ் கட்சியினர் 235. இதுவரையும் கடமையாற்றிவந்த பத்து மந்திரிகளில் ஒன்பதுபேர் தேர்தலில் வெற்றிபெற்றனர். பிரதமர் நேரு அவர்களின் சொந்த மாகாணமும் இதுவே.

**பிரிந்து சென்றவர்கள்**

காங்கிரஸ் கட்சியிலுள்ள தலைவர்கள் பிரிந்து புதிய கட்சிகளை உண்டாக்கி ஏதோ வெட்டி விழுத்திவிடலாமென்று நினைத்தனர். அவசியமின்றிக் காங்கிரஸ் கட்சியின் பெலனைக் கெடுத்தனர் இவர்கள் நினைத்தது ஒன்றும் பலிக்கவில்லை. சோஷலிஸ்ட் கட்சித் தலைவர் ஜெயப்பிரகாஸ் நாராயண எந்த மாகாணத்திலாவது பெரு வெற்றியை அடைந்தாரில்லை. ஒவ்வொரு மாகாணத்திலும் பத்து அல்லது பன்னிரண்டு ஸ்தானங்களுக்கு மேல் இக் கட்சிக்குக் கிடைக்கவில்லை. கிருபளானியின் பிரஜ மஹடூர் கட்சியின் கதியோ அதிலும் கேவலம். இப்போது கிருபளானியே தேர்தலிற் படு தோல்வியடைந்துவிட்டார். சென்னையில் இக்கட்சியின் பிரதான அங்கத்தவராய் அதை ஆதரித்துநின்ற திரு. பிரகாசம், திரு. அரங்கா என்பவர்களும் தோல்வியடைந்தவர்

**மந்திரி சபை அமைத்தல்**

காங்கிரஸ் கட்சியினர் பொதுவாக அநேக மாகாணங்களில் வெற்றியடைந்துள்ளனர். தேர்தல் நடந்த 22 மாகாணங்களில் இரண்டினைத்தவிர மற்றைய மாகாணங்களில் காங்கிரஸ் அரசாங்கம் அமைப்பது கஷ்டமாகத் தோன்றவில்லை. இப்போது மிக்க அவமான நிலையிலிருப்பது சென்னை மாகாணமும் திருவாங்கூர்கொச்சின் பிரதேசமுந்தான். இவ்விடங்களிற் கொமயூனிஸ்ட் ஆதிக்கம் கூடிவிட்டதால் என்ன செய்வதென விழிக்கவேண்டியிருக்கின்றது. திரு. பிரகாசம் தோல்வியடைந்தும் மறுபடியும் காங்கிரஸ் கட்சியை நசுக்கவேண்டுமெனக் கங்கணம்கட்டிநிற்கின்றனர். தமது கட்சியில் வெற்றியடைந்தவர்களையும் கொம்யூனிஸ்ட் அங்கத்தவரையும் சேர்த்து ஒரு மந்திரி சபை அமைக்கலாமோவென்று பெருமுயற்சி செய்கின்றனர் ஆனல் நாட்டில் பெரும் ஊழலைக் கொண்டுவரவிருக்கும் கொம்யூனிஸ்ட் கட்சியுடன் மற்றைய எக் கட்சியும் சேரமாட்டாது. இப்போது சென்னையில் கட்சியளவில் தொகையான அங்கத்தவரையுடையது காங்கிரஸே. சுயேச்சைக் கட்சியினர் காங்கிரஸ் கொள்கைகளை ஏற்று ஒருபோது காங்கிரஸ் கட்சியுடன் சேர்ந்தால் மந்திரிசபைஅமைப்பதுகஷ்டமன்று.

**குடியரசுத் தலைவர்**

தேர்தல்கள் எல்லா மாகாணத்துப் பாராளுமன்றங்கட்கும், டில்லியிலுள்ள மத்திய சபைக்கும் முடிவடைந்தபின் ஏப்பிரல் மாதம் குடியரசுத் தலைவர் தெரியப்படுவர். இவரைத் தெரிபவர்கள் இப்போது பொதுமக்களின் வாக்குகளால் தெரியப்பட்ட அங்கத்தவர்களே. இருபத்திரண்டு மாகாணச் சபைகளிலுள்ள அங்கத்தவர்களும் மத்திய சபையிலுள்ள அங்கத்தவர்களும் சேர்ந்துமொத்தம்3782பேராவர் இவர்களே ஜனதிபதியைத் தெரிவார்கள்.

# சர்வோதய காணிக்கை

## நீர்வேலிக் கிராமத்தில் ஆரம்ப முயற்சி

மகாத்மாவின் அமரத்துவ தினம் (30-1-52) தொடக்கம் 7 நாட்களாக நீர்வேலியில் அகில இலங்கைக் காந்திய சேவா சங்கப் பொதுக் காரியதரிசி திரு. சி. க. வேலாயுதபிள்ளை அவர்கள் சர்வோதய காணிக்கை சேகரித்தார். இக்காணிக்கை சர்வோதய ஆச்சிரமத்தின் ஆரம்ப நிதியாக அமையும். குறித்த 7 நாட்களிலும் 107 மணித்தியாலம் 30 நிமிஷம் உழைத்து ஒவ்வொரு வீடாக 828 வீடுகளுக்கு திரு. வேலாயுதபிள்ளை காணிக்கைக்காகச் சென்றிருக்கின்றார். 131 வீடுகளில் வீட்டிலுள்ளவர்கள் இருக்கவில்லை. 198 வீடுகளிற் காணிக்கையாகப் பணம் கொடுக்க வசதியிருக்கவில்லை. 499 வீடுகளில் ஒரு சதம் முதல் 10 ரூபா வரை பெற்று 212 ரூபா 33 சதம் சர்வோதய காணிக்கையாகச் சேர்ந்துள்ளது.

சில வீடுகளிலே தாய்மார் பணவசதியீனத்தினல் உணவுத் தானியங்களை வழங்கினர். இவை ஏலத்தில் விற்கப்படுமெனத் தெரிகின்றது. நீர்வேலிக் கிராமம் வறுமைமிக்க கிராமம். இக்கிராமத்திற் குறைந்த பட்சம் ரூபா 200 சேரும் என எதிர்பார்க்கப்பட்டது. காணிக்கை சேர்ப்பதற்கு 2, 3 தினங்களுக்கு முன்னரே துண்டுப்பிரசுரங்கள் மூலம் காணிக்கை சேர்க்கும் விபரம் குறித்து ஒவ்வொரு வீட்டுக்கும் தெரியப்படுத்தப்பட்டது. சர்வோதயம், ஆஸ்ரமம் என்ற இரண்டு சொல்லும் நீர்வேலிக் கிராமத்திற் பலருக்குப் புதிய சொற்களாகும். பல வீடுகளில் இந்தச் சொற்களுக்கு விளக்கம் கொடுக்கப்பட்டது. இந்த விதமான விளக்கம் கொடுப்பதே காணிக்கை சேர்ப்பவருக்கு ஒரு பெரிய வேலையாக இருந்தது. கிராமமக்கள் விஷயத்தை நன்கு அறிந்து சர்வோதய காணிக்கைக்கு நல்ல ஆதரவு காட்டியிருக்கின்றார்கள்.

காணிக்கைபற்றிய பிரசாரத்துக்கு நீர்வேலியிலுள்ள அத்தியார் இந்துக்கல்லூரி, சி. சி. பாடசாலை, ஆர். சி. பாடசாலை, நீர்வேலியிலுள்ள ஐக்கிய பண்டகசாலைகள், சனசமூகநிலையங்கள் என்பன பேராதரவளித்தன. பிராமண சமூகத்தினர் முதல் அரிஜன சமூகத்தினர் ஈருகச் சர்வோதய காணிக்கை வழங்கி ஆதரித்திருக்கிறார்கள். இக்கிராமத்தின் சனத்தொகை 4500; மாணவர் தொகை 1200. உத்தியோகஸ்தர் இக்கிராமத்தில் மிகக் குறைவு.

தொண்ணூறு சத வீதமானோர் கமக்காரர்கள். புகையிலை, வெண்காயம், வாழை முதலியன இக் கிராமத்தின் வியாபார உற்பத்திப்பொருள்கள். உணவுப்பொருள் உற்பத்தி மிகக் குறைவு. இதனலேயே மக்கள் பட்டினியால், வறுமையால் வாடுகின்றனர். இக்கிராமத்தில் 9 ஐக்கிய நாணய சங்கங்களும், 5 ஐக்கிய பண்டகசாலைகளும், ஒரு ஐக்கிய இரும்புத் தொழிற்சாலையும், ஒரு ஐக்கிய விளைபொருட் சங்கமும், ஒரு ஐக்கிய வாழைப்பழச் சங்கமும், 5 சனசமூகநிலையங்களும், 4 சைவாலயங்களும் உள. இக் கிராமத்தில் மதக் கல்வி மிகவும் சீரழிந்து இருக்கின்றது. பெரும்பாலான மக்களும் மாணவர்களும் அன்னிய நாகரீக வாழ்க்கைமுறைகளைத் தீவிரமாகப் பின்பற்றி வருகின்றனர். கல்விநிலை மகா மோசம். மாணவர்கள் கல்வி பயில்வதன் நோக்கம் அரசாங்க உத்தியோகம் பெறுவதேயாகும். பொதுமக்களுள் ஏறக்குறைய 65 சதவீதமானோருக்கு எழுதவாசிக்கத் தெரியும்.

### திருநெல்வேலி விவசாயப் பாடசாலை

**மாணவர் நிர்க்கதி**

யாழ்ப்பாணம் நல்லூர் கிராம சங்க அங்கத்தவர் திரு. சி. சுப்பிரமணியம் பின்வரும் பிரேரணையை நல்லூர்க்கிராம சங்கத்திற் சமர்ப்பித்துள்ளார்.

விவசாயக் கல்வி கற்பதற்கு திருநெல்வேலிவிவசாயப்பாடசாலையில் விடுதிமாணவர்களாக 30 பேரும் தினசரி சென்று கல்விகற்பதற்கு 20 பேருமாக 50 பேரை 1951-ம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் அனுமதித்தார்கள். பின்னர் 1952ம் ஆண்டு மாசி மாதம் 3-ந் திகதியைக் கொண்ட கடிதத்தில், தினசரி சென்று கல்விகற்றுவரும் குறித்த 20 பேருக்கும் 1-2-52 தொடக்கம் சகாயப் பணம் வழங்கப்படமாட்டாதெனவும், விருப்பமாயின் குறித்தபணம் இல்லாமற் கல்வி கற்கலாமென்றும் குறித்த பாடசாலை அதிகாரிகள் அறிவித்திருக்கிறார்கள். அத்துடன் விடுதி மாணவர்களிற் சிலரையும் இது பாதித்திருக்கின்றது. இதனல் இக்கல்வி கற்பதற்காக வேறு முயற்சிகளில் ஈடுபடாதிருந்தோரும், கல்விகற்றுக் கொண்டிருந்தோருமாகிய இவர்கள் இக்கதிக்குள்ளாக்கப் பட்டிருக்கின்றனர். இது விஷயத்தை மேலதிகாரிகள் விசாரணைசெய்து மீண்டும் குறித்த மாணவர்களுக்குச் சகாயப்பணம் வழங்குவதற்கான வழிவகைகளைச் செய்து கொடுக்கவேண்டுமென இச்சங்கம் அபிப்பிராயப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில்
ஈழகேசரி
கிடைக்குமிடம்:
த. தம்பித்துரை,
பத்திரிகை விற்பனையாளர்,
226, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
கிளைகள்:
(1) 67, கச்சேரி வீதி
(2) 33, பெரியகடை
யாழ்ப்பாணம்.

### மன்னர் பிரேத அடக்கம்

வெள்ளிக்கிழமை 15-2-52 லண்டனில் நடைபெற்ற ஆறும் ஜோர்ஜ் மன்னரின் பிரேத அடக்கச் சடங்குகளிற் பங்குபற்றுவதற்காக மகாராணிகளும் ஏழு அரசர்களும் பிறநாட்டுத் தலைவர்களும் பிரசன்னமாயிருந்தனர். 11வது நூற்றுண்டில் வின்ஸரிற் கட்டப்பெற்ற கோட்டைக்குள்ளே உள்ள சென் ஜோர்ஜ் தேவாலயத்தில் மன்னரின் பூதவுடல் அடக்கஞ் செய்யப்பட்டது.

### தேகவியோகம்

**திரு. அ. க. கந்தையா**

அளவெட்டியிற் பிரபல வைத்தியராயிருந்து காலஞ்சென்ற திரு. கதிரித்தம்பி அவர்களின் புத்திரரும், இலங்கை அரசாங்கவைத்தியப் பகுதியில் 'அப்போதிக்கரி'யாகக் கடமையாற்றி இளைப்பாறியிருந்தவருமான திரு. அ. கந்தையா அவர்கள் தமது 65-வது வயதில் சிலகாலமாகத் தம்மைப் பிடித்திருந்த நோய்காரணமாக அளவெட்டியிலுள்ள தமது இல்லத்தில் 13-2-52 புதன்கிழமை காலை தமது பூதவுடலைநீத்து இறைவன் திருவடி நீழலை யடைந்தனர். அன்று மாலை ஈமக் கிரியைகள் யாவும் சைவமுறைப்படி நடைபெற்றன. அன்னரின் ஆன்மா சாந்தியடைவதாக!

### கொழும்பு - நிருபர் கடிதம்

# நேரு பக்தர்கள் அபிமானம்

## படத்துக்கு மாலைசூட்டி மகிழ்ந்தனர்

16-2-52

நேருஜியின் தேர்தல் முடிவுகள் எப்பொழுது வெளிவரும் என்று இலங்கை மக்கள் வெகு ஆவலுடன் இருந்தனர். கொழும்பு தேநீர்க் கடையொன்றில இருந்த வானெலிப் பெட்டிமூலம் நேருவின் வெற்றிச் செய்தி வெளிப்பட்டதைக் கேட்டுக்கொண்டிருந்த இளைஞர்களுள் ஒருவர் தனது மகிழ்ச்சியை அடக்க முடியாமல் ஓடோடியும் போய் ஓர் அழகிய பூமாலையை வாங்கி வந்து தேநீர்க் கடையிலிருந்த நேருவின் படத்திற்குச் சூட்டித் தம் அன்பைத் தெரிவித்தார். மற்ற இளைஞர்களும் அவ்வாறே செய்யத் தொடங்கினர். நேருவை நேரே கண்டு தம் உள்ளக் களிப்பை வெளிக்காட்ட முடியாத நேரு அபிமானிகள் பலர் இவ்வாறே பலவிடங்களிலும் செய்திருப்பர். ஸ்ரீ நேரு 2,38,571 வாக்குகள் பெற்று ஏனைய நான்கு அபேட்சகர்களதும் மொத்த வாக்குத்தொகையின் இரட்டிப்புத் தொகையளவு பெற்றது நூதனமன்று. உலகத்திலே இவ்வித வெற்றி வேறெந்தப் பிரதமருக்காவது கிடைத்திருக்க மாட்டாதென்றே கருதுகிறேன். இந்த நேருவையே கொழும்புத் திட்டக் காட்சியைத் திறக்கவும் வரவழைத்திருக்கக் கூடாதா என்று சிலர் வினவுகின்றனர். இக் கேள்வியை இலங்கைப் பிரதமரிடமல்லவா கேட்டறிய வேணும்?

**ஆலயச் சட்டம்**

ஆலயச் சட்டத்திற் சில திருத்தங்கள் செய்யவேண்டுமென்ற தீர்மானம் கொழும்பு விவேகானந்தசபையின் நிர்வாகசபைக் கூட்டமொன்றில் நிறைவேறியுள்ளது. ஆலய அறநிலைய ஸ்தாபனங்களை நிர்வகிக்கும் பொறுப்பை ஆலய வழிபாட்டன்பர்கள் தெரிவுசெய்த ஒரு மத்திய சபையிடம் ஒப்படைக்கவேண்டுமேயன்றி, மந்திரியவர்கள் நியமிக்கும் சபையிடம் ஒப்படைப்பது புத்தியன்று என இச்சபை கருதுகிறது. அறநிலைய அதிகாரியினதும் அவரது குமாஸ்தாக்களினதும் செலவை அரசாங்கம் பொறுப்பதா அல்லது கோயில்களின் வருவாயில ஒருபகுதியை ஒதுக்கி அதிலிருந்து பொறுப்பதா என்பதும் இந்த மசோதாவில் திட்டமாகக் குறிக்கப்படவில்லை. ஆலய வழிபாட்டன்பர்களின் பிரதிநிதிகளைக் கொண்ட மத்திய சபைக்கு அபேட்சகர்களைத் தெரிவதில் சாதனமுறையில் பல இடைஞ்சல்கள் உண்டென்பதும் உண்மைதான். மத்தியசபை அங்கத்தவர்கள் தம் கடமையைச் செவ்வனே செய்கின்றார்களோ வென்று பார்ப்பதற்கு அறநிலைய அதிகாரிக்குத் தத்துவ மிருக்கவேண்டுமெனச் சிலர் கருதுகின்றனர். இன்னுஞ் சிலர் இவ்வதிகாரி மத்தியசபையிற் பணியாளராக நிர்வாகக் கடமைகள் ஆற்றவேண்டுமெனக் கருதுகின்றனர் இப்பொழுது ஆலய அறநிலைய ஸ்தாபனங்கள் சம்பந்தமாகத் தொடரப்படும் வழக்குகள் முடிவடையச் சில வருடங்கள் செல்கின்றன. இவ்வித சீர்கேடும் இருத்தலாகாது. சட்டத்திலே திருத்தங்கள் செய்வதற்கு ஒரு உப சபையை விவேகானந்த சபை ஏற்படுத்தியுள்ளது.

# வரியிறுப்போரின் வில்லங்கம்

## கிராம வாழ்க்கையே நல்லதென்ற முடிபு

யாழ்ப்பாணம், 16-2-52

பட்டணம் வேண்டாம், கிராமந்தான் நல்லதென்பதை வற்புறுத்துகின்றது சாவகச்சேரியிலுள்ள 6-வது வட்டாரம். சாவகச்சேரி வரியிறுப்போர் சங்கத்தின் கூட்டமொன்று அவ்வட்டாரத்திலே சமீபத்திற் கூடியபோது அங்குள்ளவர்கள் தாங்கள் பட்டின சங்க நிர்வாகத்தினின்றும் விலகிக்கொள்ள விரும்புவதாகத் தெரிவித்தனர். இதையாதரித்து வாக்குகள் எடுக்கப்பட்டன. அவ் வட்டாரத்தைச் சேர்ந்த தமிழாசிரியர் ஒருவர் தமது வட்டாரம் பட்டின சங்கத்துடன் சேருமாயின் பயனடையுமெனப் பரிந்து பேசினர். ஆனல், அங்கு கூடிய மக்கள் அதை விரும்பவில்லை. இது சம்பந்தமாக வரியிறுப்போர் சங்கச் செயலாளர் பேச எழுந்தபோது சபையினர் அவரைப் பேச வேண்டாமெனக் கேட்டுக்கொண்டனர். வரிப் பணங் கொடுக்கமுடியாத பகுதிகளை மக்களின் விருப்பத்தைக் கேட்டறிந்து நீக்கி விடுவதாகச் சாவகச்சேரி வரியிறுப்போர் சங்கம் புதிய தேர்தலின்போது பிரசாரம் செய்தது. அதன்படியே இப்போது நடந்துங் கொண்டது. 6-ம் வட்டாரத்தின் முன்மாதிரியைப் பின்பற்றி சப்பச்சிமாவடி என்ற வட்டாரமும் நடந்துகொள்ளுமெனத் தெரிகின்றது. வரிப்பணம் அறவிடும் விஷயத்திலும் வரியிறுப்போர் சங்கம் மக்களுக்கு அளித்த வாக்குறுதியைக் காற்றிலே பறக்கவிடமாட்டாதெனப் பலரும் நம்பியிருக்கின்றனர். இக் கூட்டத்திற்குத் திரு. பி. வெற்றிவேலு தலைமை வகித்தார்.

இது இவ்வாறுகச் சாவகச்சேரிச் சந்தையிலுள்ள கடைகளின் வாடகையைக் கூட்ட வேண்டுமெனப் பொதுமக்கள் கூறியவிடத்தும் வரியிறுப்போர் சங்கத்தில் உள்ள ஒரு சிலர் இதைவிரும்புவதாயில்லை. இவர்களுக்குக் கடை முதலாளிமாரின் ஆதரவு இருப்பதால் அவர்களின் பகைமையைத் தேடப் பயப்படுகின்றனர்போலும். இந்நாட்களில வர்த்தகர்மார் போதிய பணம் சேகரிக்கின்றனர் என்பது சிறு குழந்தைகளும் அறிந்த விஷயம். அப்படியிருந்தும் கடை வாடகைப் பணத்தை உயர்த்தப் பட்டின சங்கம் தயங்குவது நூதனமாக இருக்கின்றது. எல்லாப் பளுவையும் சுமக்கப் பொதுமக்கள் இருக்கும்போது யாருக்குத்தான் என்ன?

# நூலும் நூற்கயிறும்

## 1. பஞ்சகல்யாணி

வசந்தகாலத்து மாந்தளிர் நிறம் என்று 'பஞ்சகல்யாணி' யின் நிறத்தை அம்பிகாபுரம் இந்துக் கல்லூரித் தமிழ்ப் பண்டிதர் வருணிப்பார். நல்லெண்ணெய்க் கறுப்பு என்று 'ஸயன்ஸ்' உபாத்தியார் கூறுவார். கிரைக்கொட்டைக் கறுப்பு என்பது, கறுப்பு விசேடங்களைக் குறிக்க அவர் உபயோகிக்கும் இன்னொரு தொடர் ஆகும். அதே கல்லூரியிற் படிக்கும் தங்கராஜனைப் 'பஞ்சகல்யாணியின் நிறம் என்ன?' என்று கேட்டால் 'அது சொல்லமுடியாத புதிர்' என்று கூறுவான். சிலசமயம் ரோசாப்பூ நிறமோ எனத் தோற்றுவாள். சில சமயம் சைவ வீட்டுச் சருவக் குடம் போலவும் இருப்பாள். இப்படித் தங்கராஜனின் புராணம் நீண்டுகொண்டே செல்லும்.

அவளுக்குப் பஞ்சகல்யாணி என்பது பட்டப் பெயர். இப்பட்டப் பெயர் அக் கல்லூரியின் ஒரு விளையாட்டு விழாவின்போது முற்கூறிய தமிழ்ப் பண்டிதரால் மனமுவந்து அளிக்கப்பெற்றது; அதன் சரியான பொருள் கல்லூரியில் ஆசிரியர் மாணவர் ஒருவருக்குமே தெரியாது. ஏதோ அவள்மேலுற்ற ஈடுபாட்டினுற் பண்டிதர் அப்பெயரை

### கசின்

வைத்திருக்கிறார் என்று ஆசிரியர் தமக்குள் நினைத்துக் கொண்டார்கள். பெண்களுக்குரிய ஐந்து இலட்சணங்களும் பொருந்தியவள் என்பதனுல் அப்பெயரை வைத்தார் என்று தங்கராஜன் தனது பரிவாரங்களுக்குச் சொல்லிக்கொள்வான். ஐந்து பேரைக் கல்யாணம் செய்யக்கூடியவள் என்று தங்கராஜனின் எதிர்ப் பரிவாரங்கள் பறைசாற்றும்.

'பஞ்சகல்யாணி' என்று வழங்கப்படும் தங்கமணி செல்லப்பா, அம்பிகாபுரம் இந்துக் கல்லூரியில் உயர்தர வகுப்புப் படிக்கும் ஒரு மாணவி. மலாயாப் பென்ஷனியர் செல்லப்பாவின் ஒரேயொரு மகள். தனது மார்பிலிருந்து மூக்குவரை உயர்ந்த புத்தக அடுக்கும் அதன்மேல் மடித்து வைத்த நூற்கயிறும் முன்னேவர, அவள் நடந்து வருகிறளோ, ஓடி வருகிறளோ என்று சொல்ல முடியாதபடி கல்லூரியை வந்தடைவாள். தங்கராஜன் அவளுடைய நடையைத்தான் அன்னநடை என்று புலவர்கள் குறிப்பிட்டார்கள் என்று வாதாடுவான். அவளுடைய நடையை நன்கவதானித்த தமிழ்ப் பண்டிதர், விளையாட்டு விழாவின் போது வாய்த்த சந்தர்ப்பத்தையும் நன்குபயோகித்து, சர்வ இலட்சணங்களுமமைந்த குதிரை என்னும் பொருள்படப் 'பஞ்சகல்யாணி' என்று பட்டமளித்தார். குதிரைநடையையுடைய நமது கதாநாயகி

(தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க)


உங்கள் சருமம் ஒவ்வொரு தினமும் அதிக அழகு பெறுவதைப் பாருங்கள்




ரெக்ஸோனுவிலிருக்கும் *கேடில்* தான் உங்கள் சருமத்திற்கு புது ஆரோக்கியமும் புது தூய்மையும் புது எழிலும் தருகிறது.

தினமும் குறைந்தபக்ஷம் இரண்டுமுறை ரெக்ஸோனு உபயோகியுங்கள். கேடில் அடங்கிய அதன் நுரையை மெதுவாக சருமத்தில் தேய்த்து பிறகு கழுவுங்கள். ரெக்ஸோனுவிலிருக்கும் கேடில் சருமத்தை மாசற்றதாகவும் மழமழப்பாகவும் அழுத்தமாகவும் செய்வதோடு புது ஆரோக்கியமும், புது அழகும் பெறச்செய்யும். வெப்பம், குளிர், காற்று, புழுதி இவைகள் பாதிக்காமல் சருமத்தை கவர்ச்சியுடையதாக இருக்கச்செய்கிறது.




**புதுமைப்பித்தன் நினைவுமலர்:** பதிப்பாசிரியர்: நா. சு. ராமசாமி; கிடைக்குமிடம்: 'சுந்தர விலாஸ்', இராமவர்மபுரம்; நாகர்கோவில்; விலை: ரூ. 1-8-0.

இருபதாம் நூற்றுண்டிலுதித்த பாரதி எப்படிக் கவிதையுலகிற் புரட்சியுண்டுபண்ணித் தனித்து நிற்கும் மணியான கவிதைகளைத் தமிழுலகிற்கு அள்ளித்தந்தாரோ, அதேபோல் வசனத்தில் முற்றும் மாருகத் தமக்கென்று ஒரு அழகு நடை அமைத்துக் கொண்டவர் புதுமைப்பித்தன் எனப் பதிப்பாசிரியர் கூறுவதை எவரும் ஆட்சேபிக்கமாட்டார்கள். கதையாகிலென், கட்டுரையாகிலென், கவிதையாகிலென், அவற்றையெல்லாம் புதுமைப்பித்தன் தனக்குரித்தான திறமையுடன் கையாண்டு தமது அனுபவஞானத்தை அவற்றிலே பொறித்துச் சென்றுள்ளார். பழமையிற்பற்றும், புதுமையிற் பித்துங்கொண்ட புதுமைப்பித்தன் தமிழ் இலக்கிய உலகில் ஏற்படுத்திய புரட்சியானது தமிழ் மரபிற் கால்கொண்டு எழுந்ததாகும். ஆகவேதான் அவர் தமது சிருஷ்டிகள் :

காலத்தால் சாகாது
காலத்தின் வலத்தால் மலியாது

என மிகுந்த நெஞ்சுரத்துடன் அறைந்திருக்கின்ருர். தமிழ் நாட்டில் எழுதிப் பிழைப்பது அபாயகரமானதென்பதை உலகறியச் செய்து ஒரு சில இலக்கியச் சீலர்களின் வெளி வேஷங்களை அச்சமின்றி அம்பலப்படுத்திய புதுமைப்பித்தன் இலட்சியபீடத்திற் பலியானுர். அமர இலக்கியத்தைச் சமைத்துத் தமிழ் மக்களிடையே சாகாவரம் பெற்று வாழும் புதுமைப்பித்தன் நினைவு மலர் வாடா மலராகும். ஆகவேதான் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை அவர்கள் பின்வருமாறு பாடியிருக்கின்ருர்கள் :

''சிந்தைக் கினிய கட்டுரைகள்
சிறந்த கதைகள் பற்பலவும்
தந்த புதுமைப் பித்தன்பேர்
தமிழ்நாட்டன் பாபோற்றிடவே
வந்த நினைவு மலரென்றும்
வாடா மலராய் மணம்வீச
அந்தி வண்ணு! பிறைசூடி
ஆடும் பித்தா! அருளவாயே!''

இம்மலரில் புதுமைப்பித்தனின் மேதையை நன்குணர்ந்த அன்பர்களும் அறிவாளர்களுமான திருவாளர்கள் எஸ். வையாபுரிப்பிள்ளை, அ. சீனிவாசராகவன், மு. வரதராசன், நாரண துரைக்கண்ணன், ரகுநாதன், ஆர். திருஞானம், கு. அழகிரிசாமி, வல்லிக்கண்ணன், எஸ். எஸ். மாரிசாமி, தெ. ப. பெருமாள், வித்துவான் உமைதாணுப்பிள்ளை, சுகி, அகிலன் உட்பட வேறும் பலர் கட்டுரைகளும் கவிதைகளும் எழுதியுள்ளனர். கமலாவிருத்தாசலம் தமது கணவர் உயிரோடு இருந்த காலத்தில் அனுபவித்த துன்பங்களைத் தமது கட்டுரைமூலம் எமக்குத் தெரிவித்துள்ளார். இலக்கியம், கலை என்பனபற்றிப் புதுமைப்பித்தன் கொண்டுள்ள கருத்துக்களும் மலரிற் தொகுக்கப்பட்டுள்ளன. அவருடைய அருமைப் புதல்வி தினகரிக்கு இம்மலர் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. கவியுள்ளம் படைத்த புதுமைப்பித்தனைப்பற்றி அறிந்து கொள்வதற்கு இம்மலர் உதவிபுரிகின்றது.

•

**மகிழ்ச்சி :** ஆசிரியர்: நா. சதானந்தம். விலாசம்: மகிழ்ச்சி இல்லம், விருதுநகர்; ஆண்டுச்சந்தா: ரூ. 2-4-0; தனிப்பிரதி அணு 3.

சீர்திருத்த மாத இதழான மகிழ்ச்சியின் பொங்கல் மலரில் கவிமணி, சுத்தாநந்தர், கி. வா. ஜ. நாரண துரைக்கண்ணன், அகிலன், எம். எஸ். கமலா ஆதியோர் உட்பட வேறும் பலர் கவிதைகள், கட்டுரைகள், கதைகள் எழுதியுள்ளனர். புகைப்படங்களும், வர்ணப் படங்களும் மலரை அணி செய்கின்றன.

•

**வரப்பெற்றேம்**

**நந்தன வருஷ வாக்கிய பஞ்சாங்கம் 1952—53 :**

யாழ்ப்பாணம்கொக்குவில் இரகுநாதையர் நந்தனவருஷ வாக்கிய பஞ்சாங்கம் வழக்கம்போற் சகல அம்சங்களுடன் வெளியாகியுள்ளது. கரவருஷ பஞ்சாங்கத்தில் 25-2-52 பிற்பகல் சூரிய கிரகணம் தென்னிந்தியா, இலங்கை,தென்பர்மாவில் தோற்றும் எனக் குறிப்பிட்டிருந்தது. நந்தன வருஷ பஞ்சாங்கத்தில் பிழை திருத்தம் என்ற தலைப்பில் இச் சூரிய கிரகணம் இந்தியாவில் தமிழ்நாட்டிற்கு வடக்கிலும் வடபர்மாவிலுமே தோற்றுமெனக் கண்டிருக்கின்றது! பிரதி ஒன்று விலை ரூ. 1-25. கிடைக்குமிடம்: சோதிடபரிபாலன மடம், கொக்குவில், இலங்கை.

— உழையுங்கள் : —
மாதம் ரூ. 100/-தொடங்கி 300/-வரை முதலீடின்றி
உழையுங்கள்
விபரங்கள் :
இனமாக அனுப்பப்படும்
GIRSON KNITTING WORKS, LUDHIANA.


[4529 in]

**Kokuvil Hindu College**

Applications are invited for the post of Librarian. Preference will be given to people holding good academic qualifications. Only those who will agree to serve for at least three years need apply.

Applications to be addressed to the Manager, Through the Principal, Kokuvil Hindu College. Closing date for application 20-2-52. Selected candidate should be ready to assume duties on 1-3-52.

[4530]




அன்பான மருமக்களே!

"கொழும்புப் பொருட்காட்சி கிட்டிவிட்டது. 14-ந் திகதியும் நெருங்கிவருகிறதெனச் சந்தோஷப்பட்டுக்கொண்டிருந்தேன். மாமா! எங்கள் அரசாங்கத்தார் பொருட்காட்சியை 23-ந் திகதிக்கெனப் பின்போட்டுவிட்டார்களாம். இது எவ்வளவு மனவருத்தமாயிருக்கிறது" என்று ஒரு மருகி அழாக்குறையாக எழுதியிருக்கிறார்.

எதிலும் அதிக ஆசை, ஈடுபாடு இருக்கக்கூடாது. பொருட் காட்சி கட்டாயம் பார்க்கவேண்டியதுதான். பின்போடப்பட்டதற்காகத் துக்கப்படாது ஆறுதலாகப் போய்ப் பார்த்து மகிழுங்கள். அறிவையும் ஆனந்தத்தையும் அளிக்கக்கூடிய பல காட்சிகள் அங்கு ஒழுங்கு செய்யப்படுவதாக அறிகின்றேன். வெறும் வேடிக்கை பார்க்கப் போகாது எல்லாவற்றையும் பார்த்துப் பயனடைந்து வாருங்கள். அங்கு காண்பவற்றைப்பற்றியெல்லாம் பாலர் பகுதியில் எழுதப்போகிறீர்களல்லவா? சரி, எங்கே பார்ப்போம் உங்கள் கெட்டித்தனத்தை!

கேசரி மாமா

# அற்புத ஊரி

மே.403 ம. த. லோறன்ஸ்

மட்டக்களப்பிற் சுமார் முப்பது மைல் நீளமுள்ள வாவியொன்று உள்ளது. சுசிநிறைந்த இந்த வாவிக்கரை ஓரங்களிலே ஊரிகள் வாழ்கின்றன. இவ்வூரிகள் சங்கு வர்க்கத்தைச் சேர்ந்தன. நீரின் மட்டத்தின் கீழ், கற்பாறைகள் நிறைந்துள்ள இடங்களிலும் ஊரிகள் கூட்டங் கூட்டமாக வாழ்கின்றன.

முழுமதியானது பால் நிலவைக் கொட்டிக்கொண்டிருக்கும் அமைதிநிரம்பிய இராக்காலத்தில் வாவிமீது தோணி மூலம் கற்பார்கள் நிரம்பியுள்ள இடங்களுக்குச் சென்றால், நீரினுள் இருந்து ஒருவித இசை எழுப்புவதைக் கேட்கலாம். இவ்விசை பாடும் செந்துவை மேல் நாட்டார் "பாடும் மீன்" எனக்கூறுகின்றனர். கிழக்கிலங்கை வாசிகள், இவ்வதிசய ஒலி சங்கினத்தைச் சேர்ந்த ஊரிகள் பாடுவதனுதில் ஏற்படுகின்றதென நம்புகின்றனர்.

இவ்வளவு பெருமை வாய்ந்த இசை பாடும் ஊரிகளைப்பற்றிச் சிறிதளவாகுதல் நாம் அறிந்திருப்பது அவசியமல்லவா ........?

கோடைகாலங்களிலே, வாவிக் கரையோரங்களுக்குச் சென்று பார்த்தால், சிறியனவும் பெரியனவுமாகிய ஊரிகளின் மேலோடுகள் பலவற்றைக் காணலாம். இவை கடினமானவை. இவைகளைச் சேகரித்துச் சுட்டுச் சுண்ணாம்பு ஆக்குவார்கள். சுருள்போன்று காணப்படும் ஊரிகளின் ஓடுகள் மூன்று அங்குலத்திற்கு மேற்படாமலும், அரை அங்குலத்திற்குக் குறையாமலும் உள்ளன. இவற்றுள் நீண்ட கால்களையும், சிறிய கண்களையும் கொண்ட ஒருவகைச் செந்து வாழ்கின்றது. நாம் ஊரிகளைக் கையில் எடுத்ததும் அந்தச் செந்து ஓட்டுக்குள் மறைந்துவிடுகின்றது. நீரினுள் போட்டதும் மெல்ல வெளியே கால்களை நீட்டிக் கொண்டு வருவதைக் காணலாம். இந்தச் செந்து கடும் நீலநிறமுடையதாக விருக்கின்றது. ஊரி ஊர்ந்துபோகும் இடங்கட்கெல்லாம் அதன் ஓடும் நகர்ந்துசெல்லுகின்றது.

(தொடரும்)

வடமாகாண ஆசிரியர் சகாயநிதிச் சங்கம்

(1933-ம் ஆண்டில் நிறுவப்பட்டது)

அகால மரணமடையும் ஆசிரியரின் குடும்பத்துக்கும், இளைப்பாறும் ஆசிரியருக்கும் உதவி செய்யும் நோக்கமுடைய

ஒரு ஸ்தாபனம்.

30 வயதுக்குட்பட்ட சுயபாஷா ஆங்கில ஆசிரியர் அனைவரும் அங்கத்தவராகச் சேரலாம்.

1-1-51-ல் அங்கத்தவர் தொகை 637.
1-1-51-ல் கையிருப்பு ரூபா 1,32,603-37.

1950-ல் இளைப்பாறிய எட்டு ஆசிரியருக்குச் சகாயமாகவும் கட்டணப் பணமாகவும் கொடுக்கப்பட்ட தொகை ரூபா 11,035-39

அங்கத்தவராகச் சேராதவர்
இப்பொழுதே சேரவும்!

சங்க விதிகள், மனுப்பத்திரம் முதலிய விபரங்களுக்கு பின்வரும் விலாசத்துக்கு எழுதவும்.

காரியதரிசி,
வடமாகாண ஆசிரியர் சகாய நிதிச் சங்கம்,
[4524] 8, பிறவுன் ரோட், : : யாழ்ப்பாணம்

## மாமா பதில்

மே. 502 பொ. தில்லைநாயகம் ஆமாம், ஜோர்ஜ் மன்னர் காலமானர். என்ன செய்யலாம்? நீர் எழுதியிருப்பது சரியே.

கி. 595 க. நாகம்மா உமது கதை பாயாசம்போல இனிப்பாக இருக்கின்றதே!

மே. 568 வ. சி. நடராசா உமது கடிதத்தைப் பரிவுடன் படித்தேன்.

மே. 37 சி. கனகரத்தினம் நீர் எடுத்துக்காட்டிய உண்மையை அக் கதை எழுதிய மருமகனுக்கு அறிவித்திருக்கின்றேன். பிறருடைய விஷயங்களைப் படித்துவிட்டு அப்படியே அதனைப் பாலர்பகுதிக்கு எழுதியனுப்புவது பெரிய குற்றந்தான்.

மே. 403 ம. த. லோறன்ஸ் நீர் எழுத விரும்பிய கதைகளை எழுதியனுப்பலாம். நன்றாக இருக்குமாயின் பிரசுரிப்பேன். உமது கடிதம்படித்து மாமியும் மகிழ்ந்தார்.

## புத்தொளி மலர்ச்சி

ஈழகேசரி பாலர்பகுதி மருமக்களில் ஒருவரான ந. சிவபாதம் என்பவர் எழுதிய புத்தொளி மலர்ச்சி என்ற சிறிய வெளியீட்டில் மாணவர்களுக்கு ஏற்ற ஏழு கட்டுரைகள் உள. ஈழகேசரியிற் பரிசுபெற்ற கட்டுரையும் அவருடைய வானொலிப்பேச்சும் இதிற் சேர்க்கப்பட்டுள்ளன. கல்வி பயிலும்போதே எனது மருமகன் அழகான புத்தகமொன்றை வெளியிட்டுவிட்டார். அவரைப் பாராட்டுகின்றேன். இதன் விலை சதம் 30; கிடைக்குமிடம் ந. சிவபாதம், பத்தமேனி, அச்சுவேலி.

—கேசரி மாமா.

## வெட்கம்


எனது மருமக்களிற் சிலர் வேறு பத்திரிகைகளிலும் புத்தகங்களிலும் உள்ள கதைகளை வாசித்துவிட்டு அவற்றையே தங்கள் சொந்தக் கதைபோல எழுதிப் பாலர்பகுதிக்கு அனுப்பிவைக்கின்றனர். இப்படிச் செய்வது வெட்கமாகும். எனது மருமக்கள் இம்மாதிரித் தவறுகள் செய்யக்கூடாது. கவனிக்கவும்.

## மருமகன் கடிதம்

அன்புள்ள கேசரி மாமா அவர்களுக்கு!

வணக்கம், எங்கள் பாலர் பகுதி சோபையுடன் விளங்குவதுபோல் இலங்கைப் பத்திரிகைகளிலுள்ள வேறு எந்தப் பாலர்பகுதியுமே சோபையுடன் விளங்குவதில்லை. இதற்கெல்லாம் காரணம் தங்களின் முயற்சியல்லவா? எனது இதயம் நெகிழ்ந்த பாராட்டுகள். மேலும் எங்கள் பாலர்பகுதியில் இப்போது பல கட்டுரைகள், முன்னைவிட அதிகமாக இடம்பெறுகின்றன. இதைவிட மகிழ்ச்சிகரமான செய்தி வேறு என்ன மருமக்களுக்கு வேண்டும், மாமா? ஈழகேசரியைக் கையில் எடுக்கும்போதே மகிழ்ச்சிதான் மாமா.

மே.403 ம. த. லோறன்ஸ்
மட்டக்களப்பு



மிருகங்களும் பறவைகளும்: 6

# மயில்

மே. 523 நா. சோமசுந்தரம்

மயில் என்றவுடன் மனத்திலேயோர் இன்பம் பொங்குகிறது! உள்ளத்திலே உவகை கூர்த்தனஞ் செய்கின்றது. எங்களுக்கு இவ்வளவு ஆனந்தம் ஏற்பட்டாற் கற்பனை சக்திபடைத்த — கவிதாவுள்ளமுடைய—கவிகளின் நெஞ்சம் எவ்வளவு களிப்புக்கொண்டு துள்ளிக் குதிக்கும்? அவர்கள் மயிலை அழகு ததும்ப வர்ணித்திருக்கிறார்கள். அவர்கள் காவியங்களிலே, சோலை பற்றிக் கூறும்போது அங்கு மயிலே இல்லாமற்போகாது. மயிலின் வளவளப்பான உடல் அதிலே கண்ணைப்பறிக்கும் வகையிலமைந்த பொட்டுப் பொட்டான நீலக் கருவிழிகளை நிகர்த்த வர்ணஜாலங்கள் யாவும் அற்புதமானவை. நீண்டுநிமிர்ந்த கழுத்தும் அதன் ஒயிலான நடையும் மையலையூட்டும். பெண்களின் நளின நடையை வர்ணிப்பவர்கள் மயிலை உவமையாக்குவார்கள். இறகுகள் எவ்வளவோ வகையில் உபயோகமாகின்றன.

இவ்வளவு அழகும் உபயோகமும் நிறைந்த மயிலிடம் சிறந்த கொள்கையொன்றுண்டு. மாற்றாரை எதிர்த்துத் தோற்றோடச்செய்யும் மாண்பான கொள்கைதான் அது. ஆம், தன்னை எதிர்க்கவரும் எதையும் மயில் எதிர்த்துப் போர் புரியும். பாருங்கள் மயில் மணிதரோடு கூடச் சமர்செய்து கண்களைத் தோண்டிவிடுமாம்.

தமிழர்களும் மாற்றாரைத் தோற்றோடச்செய்வதில் மகா வீரர்களல்லவா? தமிழர் நாட்டில் மயில் வாழ்கின்றபடியாற் போலும் அந்த வீரக்குணம் அதனிடமுமிருக்கிறது. தமிழரிடம் இன்று அந்தக்குணம் அருகிவந்தாலும் மயில் அந்தக் குணத்தின் சின்னமாகத் திகழ்கின்றது.

## புதிய மருமகன்

மே. 598. பொ. செ. சச்சிதானந்தன்; சிறுப்பிட்டி, நீர்வேலி.

## பிறந்ததின வாழ்த்துக்கள்

17-2-52—23-2-52

கி.56. சு. ஸ்ரீகந்த, மே.84. ந. லீலாதேவி, மே.287. வ. மாணிக்கம், கி. 367. க. மகேஸ்வரன்.

மேற்குறித்த எனது மருமக்கள் இன்றுபோல இன்னும் பல்லாண்டு வாழ்வார்களாக.

## காந்திஜி நினைவுவிழா

ஞானசாரிய சைவப்பாடசாலை

சென்ற புதன்கிழமை கரவெட்டி ஞானசாரிய ஆங்கில பாடசாலையில் காந்தி நினைவு விழாக் கொண்டாடப்பட்டது. பாடசாலை அதிபரின் தலைமையில் ஆசிரியர்களும் மாணவர்களும் காந்திஜியைப்பற்றிச் சொற்பொழிவாற்றினர். மாணவர்களுக்குச் சிற்றுண்டியும் வழங்கப்பட்டது.

## ஈழகேசரி — பாலர் பகுதி

முழுப்பெயர்: ..............................

விலாசம்: ..............................

..............................

..............................

பிறந்ததிகதி: ..............................

..............................
தந்தையார் அல்லது ஆசிரியர் ஒப்பம்

யாழ்ப்பாணம் ஐக்கிய லாப நிதி

1918-ம் ஆ. ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா 34,36700. 100 ரூபா விகிதமான 8000 பங்குகள்.

பங்குப் பணம் கட்டுமுறை:
மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாதந்தோறம் கட்டப்பட வேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்று வரவு:
எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால், ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்று வரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்:
க்ஷேமப் பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னுங் காலங்கள் வரையறுத்த ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம் 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்:
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும்.

இந்தியா நோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்:
நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 12விகிதம் அறவிடப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

வேண்டிய விபரங்களை என்மூலம் அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
[4514] சிறப்பர்

T'Phone No. 805

The
# EeLAKESARI
NATIONALIST TAMIL WEEKLY
Largest circulation in Ceylon, India, Burma & Malayan Union
Founder: N. PONNIAH

Vol. 22 | Chunnakam, Sunday, Feb. 17, 1952 | No. 31

சந்தா விபரம்
ஆண்டுச் சந்தா:
இலங்கை-இந்தியா ரூ. 6-00
மலாயா — $ 6-00
தனிப்பிரதி சதம் 10. காசு 10

## நூலும் நூற்கயிறும்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

யைப் பற்றி இன்னுஞ் சில குறிப்பிடவேண்டியிருக்கிறது.

அவளுக்குக் கண்களிலே ஒரு வருத்தம் உண்டு. அது வும் கருவிழியிலே. கருவிழி பெரிதென்பது மாத்திரமல்ல. அக் கருவிழிகளின் குணத் தை யறிந்து, இறைவனால் போதிய இடப் பரப்புடன் அமைக்கப்பெற்ற விழியின் கண், அக் கருவிழிகள் சுழ ன்று சுழன்று திரியு மியல் புடையன. ஒரு வெட்டு, ஒரு இமிட்டு, ஒரு வெறிப்பு, ஒரு எதிர்ப்பு என்று தமக்கென அமைந்த பல்வேறு கதியில் அவை சுழன்று திரியும்.

நயன பாஷை தெரிந்தவர் களுக்கும் தங்கராஜனுக்கும் மாத்திரந்தான் அக் கருவிழி களின் கதி வேறுபாட்டுப் பொருள் வேறுபாடுகள் புரி யும். தங்கராஜன் எவ்வளவு தூரத்தில் நின்றபொழுதிலும், அவனை இருத்தி எழுப்பித் தோப்புக்கரணம் போடுவிக்க வல்லன அக் கருவிழிகள். சிவபிரானின் நெற்றிக் கண் ணுக் கடுத்தபடி சக்தி வாய்ந் தனவென்றுங் கூறலாம் அக் கண்களை. அக் கண்களின் மகத்துவத்தை இனிமேல் வருங் கதையில் அறிந்து கொள்ளலாம்.

வேளாளனுக்குக் கலப்பை நுகம் போலவும், செட்டியாரு க்குத் தராசு படி போலவும், பிராமணனுக்குத் தருப்பைப் புல்போலவும், மாமேறிக்குத் தளைநார் போலவும், நாவிதனு க்குக் கத்தரிக்கை (இக்காலத் தில் மயிர் அரி கருவி) போல வும் தங்கமணி செல்லப்பாவு க்கு நூற்கயிறு. இவ்வுவமை களெல்லாம் மிகச் சரிஎன்று கூறுவதற்கு ஒரேயொரு உதா ரணம் மட்டும் கூறுகிறேன். ஷ்டி தொழிலாளர்களெல் லாம புரட்டாதி மாதத்தில் விஜயதசமியின்போது நடக் கும் ஆயுதபூசையில், தங்கள் தங்கள் கருவிகளை வைத்துப் பூஜிப்பதுபோலத் தங்கமணி செல்லப்பாவும் தனது நூற்க யிற்றை வைத்துப் பூஜித்தாள்.

மலாயாப் பென்ஷனியர் செல்லப்பா அவர்கள் தனது [illegible] யங்களைப் பெருமையாகச் சொ ல்லுவார். அதில் ஒன்று ஷ்டி நூற்கயிறுகும். பன்னிற நூல் களால் திரிக்கப்பட்ட அக் கயிற்றின் இரு அந்தத்திலும் [திரு. செல்லப்பா அவர்கள் கூட இருந்து தமது மேற்பார் வையில் பெயர்பெற்ற ஆசாரி யார்மூலம்] நகாசுவேலைகள்செ ய்யப்பெற்ற உழண்டிகள் இர ண்டு தொடுக்கப்பட்டிருந்தன.

அந் நூற்கயிற்றின் கருணை யினாலேயே தமது மகள் உடல் வலுவும், வடிவழகும் பெற்று விளங்கினாள் என்று பென்ஷனியர் தன்னிடம் பொ ழுதுபோக்கும் ஏனைய பென் ஷனியர்களுக்குக் கூறிக்கொள் வார். ஆங்கிலபாஷையில் நுண் ணிய உச்சரிப்பு விசித்திரங் கள் எல்லாம் அவளுக்கு நன்கு வருவது அந் நூற்கயிற்றின லேயே என்று அவர் வாதாடு வார். சுருங்கச் சொன்னால் அவளுடைய திறமைகள் எல் லாவற்றிற்கும் காரணம் அந் நூற்கயிறே என்பது அவரது திடமான அபிப்பிராயம். கயி று சுழற்றி ஓடுவதில் தமது மகள் மாகாணத்திலேயே முதற் பரிசைப் பெற்றது வேறு பெருமை. பஞ்சகல்யா ணிக் குதிரையின் கடிவாளக் கயிறுபோன்று, அவளுக்கு நூற்கயிறு பொருத்தமாக அமைந்திருந்தது.

நூற்கயிற்றுப் பெருமையி லேயே காலத்தைத் தள்ளி வந்த பென்ஷனியருக்கு, தே சத்திலேயே மிகச் சிறந்த உதைபந்தாட்டக்காரனில் ஒரு வனும், கம்பி மீசையின் புகழ் விளங்கவேண்டுமென்றே பிற ந்தவனும், கணிதமொன்று தவிர மற்றைய பாடங்களில் குற்றமில்லையென்று சொல்லக் கூடியதாக விளங்கியவனும், பஞ்சகல்யாணியின் விழி ஆட் சியின் குடைநிழலிருந்து வாழ்பவனுமாகிய தங்கராஜ னைப் பற்றி ஒன்றுமே தெரி யாது. —தொடரும்

இப் பத்திரிகையில் வெளி யாகும் ஹாஸ்யக் கட்டுரை கள், கதைகளில் வரும் பெயர் கள் கற்பனைப் பெயர்களே. கட்டுரையாளர் அபிப்பிராயங் களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்.

## தமிழ்க் கலைக் காவலர்

(3—ம் பக்கத் தொடர்ச்சி)

இயற்றப்பட்டது இவ்விலக் கணம். எழுத்து, சொல், பொ ருள், யாப்பு, அணி என்னும் ஐந்து இலக்கணங்களையும் உடைய இந்நூல் தமிழ்ப் புலமை உலகத்தில் பெரிதும் பாராட்டப்படுகின்றது.

பிள்ளையவர்கள் சில இல க்கிய நூல்களையும் ஆராய்ந் து பதிப்பித்தார். சங்கநூல் களுள் 'கற்றறிந்தோர் ஏற் றும கலி' என்று சிறப்பிக் கப்பட்ட கலித்தொகையை யும், சிறு காப்பியங்களுள் சிறந்ததெனக் கருதப்படும் சூளாமணியையும், தக்கோர் புகழும் 'தணிகைப் புராண' த்தையும் பதிப்பித்து உதவி யவர் பிள்ளையவர்களே.

### சாஸ்திரியார் நட்பு

இவ்வாறு தமிழ்த் தாய்க் குத் தொண்டுசெய்த பிள் ளையவர்கள் சென்னைப் பல் கலைக் கழகத்தில் பல ஆண் டுகள் தமிழ்ப் பரீட்சகராக இருந்தார். அப்போது சூரிய நாராயணசாஸ்திரி என்னும் பரிதிமாற்கலைஞன் பீ. ஏ. பரீட்சையில் தமிழ்ப்பாடத் தில் முதலிடம் பெற்றுத் தேறினார். தமிழறிஞராகிய சாஸ்திரியாரைப் பிள்ளைய வர்கள் அன்போடு தம் வீட் டுக்கு அழைத்து அவரோடு அளவளாவினார். ஆங்கில இலக்கியத்திலும் தமிழ் இல க்கியத்திலும் சிறந்த ஆர்வ முடையவராய் உரையாடிய சாஸ்திரியாரை நோக்கி 'நான் ஆங்கிலத்தில் ஒரு செய்யுள் தருகின்றேன்; அ தைத் தமிழிலே செய்யுளாக மொழி பெயர்த்துத் தாரும் பார்ப்போம்' என்று சொ ல்லி, ஷேக்ஸ்பீயர் எழுதிய வெனிஸ் வர்த்தகன் என்ற நாடகத்தில் நான்கு வரிகளை எடுத்துக் கொடுத்தார் பிள் ளையவர்கள். அவர் கொடுத்த வரிகள் இவை:—

"The man that hath
no music in himself
Nor is not moved with
concord of sweet sounds
Is fit for treason,
strategems and spoils
Let no such man trusted."

இப்பாடலை உடனே மொ ழிபெயர்த்துவிட்டார் சாஸ் திரியார். அவர் ஆக்கிய தமிழ்ப்பாட்டையும் கேளுங் கள்:—

"கன்னலங் கனிந்த பாடல்
காயகன் அல்ல னேனும்
இன்னிசை கேட்டு நெஞ்சம்
இளகிடா திருப்பான், வஞ்சம்
மன்னவர் துரோகம் ஆதி
மாபவம் செய்யத் தக்கான்
அன்னவன் தனை நம்பாமல்
அகற்றிட வேண்டு மன்றே"

என்ற மொழிபெயர்ப்பைக் கேட்டு அகம் மகிழ்ந்த பிள் ளையவர்கள் பல்கலைக்கழகம் அளித்த பட்டத்திற்கு மே லாகத் 'திராவிட சாஸ்திரி, என்ற பட்டத்தை வழங்கி னார். அன்றுமுதல் சாஸ்திரி யாருடைய நண்பர்கள் அவ ரைத் திராவிட சாஸ்திரி என்று வழங்குவது வழக்க மாய்விட்டது.

### தண்டமிழ்ப் புலவர்

தமிழே தெய்வம்; தமிழ்ப் பணியே தவம் எனக் கருதி வாழ்ந்த பிள்ளையவர்கள் இருபதாம் நூற்றுண்டு பிற ந்த நாளிலே இவ்வுலகவாழ் வை நீத்தார். அவர் இறந்த செய்தி கேட்ட செந்தமிழ் நாடு பெருந் துயரில் மூழ்கி ற்று. திராவிடசாஸ்திரியார் தமது ஆறுத் துயரத்தைப் பாட்டாலும் உரையாலும் ஞானபோதினி என்னும் பத் திரிகையில் வெளியிட்டார். அவர் எழுதினார்:— "புது நூற்றுண்டு பிறந்து யாவும இனிது செல்லும் என்று எ ண்ணி எதிர்பார்த்து நின்ற நம் தமிழுலகம், பெரிதும் துன்புறத் தக்கதோர் நிகழ் ச்சி கேட்டு நடு நடுங்குகின் றது. அந்தோ! புது நூற் றுண்டு பிறந்த அற்றைஞா ன்றே செந்தமிழுலகில் செம் மை சான்று விளங்கிய நமது ராவ்பகதூர் சி. வை. தாமோ தரம்பிள்ளையவர்கள் இவ் வுலக வாழ்வை நீத்துச் சிவ பிரான் திருவடி நீழலிற் செ ன்று சேர்ந்தனர். என்னே உலகம்! என்னே வாழ்க்கை!"

இவ்வாறு எழுதிய சாஸ் திரியார் தாம் பிள்ளையவர் கள்பால் வைத்திருந்த பெரு மதிப்பிற்குச் சான்றாக ஒரு பாட்டும் இயற்றினார்.

"காமோதி வண்டர்
கடிமலர்த்தேன் கூட்டுதல்போல்
நாம்ஓது செந்தமிழில்
நனனூல் பலதொகுத்த
தாமோ தரம்பிள்ளை
சால்பெடுத்துச் சாற்றவலர்
தாமோ தாமுடையார்?
தண்டமிழ்ச்செக் காப்புலவீர்!"


என்பது பரிதிமாற் கலைஞர் பாராட்டு.

## வட இலங். சங்கீதசபை

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

அதிசயம் இராஜசிங்கம் வயலின், 16. மீனலோஜனி துரையப்பா வாய்ப் பாட்டு & வயலின், 21. பத்மாதேவி இராஜரத்தினம் வாய்ப்பாட்டு, 23. மங்களேஸ்வரி செல்லையா வயலின், 24. சரஸ்வதி பிறைசூடி வயலின், 26. மல்லிகாவதி நாகலிங்கம் வய லின், 29. சந்திரவதன நடராஜா வயலின், 32. கமலாவதி செல்வத் துரை வயலின், 33. ஜானகிதேவி கதிரேசபிள்ளை வாய்ப்பாட்டு, 36. பகவதியம்மாள் சபாரத்தினக்குருக் கள் வயலின், 39. சிவநாயகி நாக லிங்கம் வாய்ப்பாட்டு, 40. அன்ன லட்சுமி வேலாயுதபிள்ளை வாய்ப் பாட்டு, 52. சத்தியபாலதேவி செல் வத்துரை வாய்ப்பாட்டு, 53. புவனே ஸ்வரி நமசிவாயம் வாய்ப்பாட்டு, 54. கைலாயர் பொன்னையா வாய்ப்பாட்டு, 56. சத்தியவிமலாதேவி செல்வத் துரை வாய்ப்பாட்டு, 58. ரஞ்சிதமலர் வேலுப்பிள்ளை வாய்ப்பாட்டு, 62. இராஜபாக்கியம் குழந்தைவேலு வயலின், 63. இந்திராவதி நாகலிங் கம் வயலின், 64. விமலராணி சுப்பிர மணியம் வாய்ப்பாட்டு, 67. தங்க மலர் துரையப்பா வாய்ப்பாட்டு, 68. பாலாம்பிகை மயில்வாகனம் வாய்ப்பாட்டு. (தொடரும்)

சித்ரா தான் குழந்தைகளை கவனிக்காதது பற்றி வருந்தினள்




Copyright: Horlicks Ltd.
HLC 2611

இப்பத்திரிகை, இதன் சொந்தக்காரருக்காக, யாழ்ப்பாணம்—குரும்பசிட்டி, முத்தையா-சபாரத்தினம் அவர்களால்
... 1952-ம் ஆண்டு பெப்ரவரி மீ 17-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது